திருவள்ளுவர் ஆண்டு 2042

சூன் - 2011

# செந்தமிழ்

தொகுதி : 55
பகுதி : 8

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு



செந்தமிழ்க் கல்லூரி 54ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவின்போது நீதி அரசர் ஏ.ஆர். லெட்சுமணன் அவர்கள்.
உடன் கல்லூரிச் செயலாளர் மற்றும் தமிழ்ச் சங்கச் செயலாளர் அவர்கள்.

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 55 திங்கள் இதழ்

பகுதி : 8 திருவள்ளுவர் ஆண்டு 2042

ஜூன் 2011




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

**ஆசிரியர்**

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

# ❀ பொருளடக்கம் ❀


| | | |
|---|---|---|
| ஐங்குறுநூற்றில் அணிகலன்கள் | த. வெற்றிவேல்செல்வன் | 4 |
| செம்மொழித் தமிழும் சட்ட நுணுக்கங்களும் | முனைவர் க. சின்னப்பா | 9 |
| செந்தமிழ்க் கல்லூரி 54ஆம் பட்டமளிப்பு விழாப் பேருரை | நீதிஅரசர் ஏ.ஆர். லெட்சுமணன் அவர்கள் | 16 |
| ஆற்றுப்படையில் நிலவியல் அமைப்பும் வாழ்வாதாரமும் | அ. ஓவம்மாள் எம்.ஃபில். தமிழ் | 21 |
| சிலப்பதிகாரம் - காற்சிலம்பு ஓசையிலே, புனைவியல் கூறுகள் | ச. இராஜ்குமார் | 29 |
| திருக்குறளில் தும்மல் | ஆறுவிரல் ஐம்பொறி | 37 |

# இதழ் மணம்

அன்புடையீர்,

செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.

2011–12ஆம் கல்வியாண்டின் தொடக்கத்தில் ஜூன் மாத செந்தமிழ் இதழைத் தங்கள் கைகளில் தவழவிடுவதில் மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் பெருமையடைகிறது.

முன்னால் உச்சநீதிமன்ற நீதிபதி டாக்டர் ஏ.ஆர். லெட்சுமணன் அவர்களின், செந்தமிழ்க்கல்லூரி 54–ஆம் பட்டமளிப்பு விழாப் பேருரை உள்ளிட்ட ஆறு அறிஞர்களுடைய கட்டுரை இம் மாத இதழில் இடம் பெற்றிருக்கிறது.

தொடக்க காலத்தில் அணிகலன்களைக் கண்டறிந்தவர்கள் குறிஞ்சி நில மக்கள் என்றும், அவர்களின் அணிகலன்கள் கழல், தொடி, தோள்வளை என்றும் குறிப்பிட்ட கட்டுரை ஆசிரியர் வெற்றிவேல் செழியன் அவர்கள் நெய்தல் நில மக்கள் அணிந்த வளையல்களின் வகைகளையும் நுணுக்கமாகக் குறிப்பிட்டுச் சொல்கிறார்

சங்க இலக்கியம் தொடங்கி பெரியபுராண காலம் வரை இருந்த சட்டமுறைமையை முனைவர் க. சின்னப்பா அவர்கள் குறிப்பிடுகிறார்.

முதன் முதலில் தான் தமிழில் வழங்கிய பேருரை மதுரைத் தமிழ்ச்சங்கம் செந்தமிழக் கல்லூரி 54–ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாப் பேருரையே ஆகும் எனக் குறிப்பிட்ட முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி அவர்களின் பேருரையை முழுமையாகத் தருவதில் பெருமையடைகிறோம்.

பரிசுபெற்ற புலவர் எதிர்வரும் புலவரையும் பரிசு பெற வழிகாட்டுவது ஆற்றுப்படை இலக்கியமாகும். அதில் நிலவியல் அமைப்பையும், அந்நிலத்தில் வாழும் மாந்தர்களின் வாழ்வாதாரத்தையும் சிவகாசி ஓவம்மாள் அவர்கள் சொல்லோவியமாகத் தீட்டியிருக்கிறார்.

திருமிகு. ராஜ்குமார் அவர்களின் சிலம்போசை புனைவியற் கூறுகளோடும் ஆறுவிரல் ஐம்பொறியின் திருக்குறள் தும்மலோடும் இம்மாத இதழ் தங்கள் கைகளில்....

**முனைவர் க. சின்னப்பா**

**இனி நீங்களும் இதழும்....**

# ஐங்குறுநூற்றில் அணிகலன்கள்

த. வெற்றிவேல்செல்வன்
அண்ணாமலை நகர்

இயற்கையாக இருக்கின்ற அழகில் செயற்கையான அணிகலன்களை அணிந்து கொண்டு உலா வருவது மக்களின் அன்றாட பழக்க வழக்கங்களுள் ஒன்று. ஒரு கவர்ச்சியான அல்லது பலரின் பார்வையை ஈர்க்கின்ற பொருட்களை அணிந்து கொள்வதால் அதற்கு அணிகலன் என்று பெயர். அக்காலத்தில் ஆடைகள், மாலைகள் சூடுவதைவிடப் பெண்கள் கொடிகள் போன்றப் பலவித அணிகளை அணிந்து கொண்டனர். அணிகலன் என்பதற்கு ஆபரணம், அழகு, படைவகுப்பு, அலங்காரம் ஒப்பனை, நகை என்று பல பொருள் கூறப்படுகிறது. ஆதிகாலத்தில் முதன்முதலில் அணிகலன்களைக் கண்டறிந்தவர்கள் குறிஞ்சி நில மக்களாவார்கள். அவைகள் கழல், தொடி, தோள்வலயம் என்னும் பல வகையில் அமைந்திருக்கும். பிறகாலத்தில் பொன், வெள்ளி மணிமுத்து ஆகிய அணிகலன்கள் அணியப்படுகின்றன. இனி ஐங்குறுநூற்றில் அணியும் அணிகலன்கள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## நெய்தல் நில மக்களின் அணிகலன்கள்

நெய்தல் நில மக்கள் அக்காலத்திலேயே மிகவும் சிறப்பான இலங்குவளை, செறிவளை, புரிவளை, எல்வளை எனப் பல்வேறு வகையான அணிகலன்களை அணிந்திருந்தனர். கீழ்வரும் பாடலில் தலைமகளானவள் என் வளையல்கள் அழகுடன் ஒளிபொருந்தியவை, அவற்றை நெகிழுமாறு செய்த தலைவனுக்காக நீ சொற்களை உதிர்க்கின்றாய் என்று கூறுகிறாள். இதனை,

*“நான் இலை மன்ற பாண ! நீயே*
*கொள்நேர் இலங்குவளை நெகிழ்ந்த*
*கானல்அம் துறைவற்குச் சொல்உகுப் போயே”*

(ஐங்குறுநூறு ச.வே. சுப்பிரமணியன் உரை – பாடல் 136)

என்ற பாடலால் அறியலாம். தலைவன் பிரிந்ததால் சந்து பொருந்திய

அழகிய ஒளிவீசும் வளையல்கள் எம்கைவிட்டுக் கழன்ற அவலநிலையைக் காண்பாயாக என்று பாணனிடம் தலைவி கூறியதை,

*"காண்மதி, பாணநீ ! உரைத்தற்கு உரியை*
*துறைகெழு கொண்கன் பிரிந்தென,*
*இறைகேழ் எல்வளை நீங்கிய நிலையே"*

(ஐங்குறுநூறு, ச.வே. சுப்பிரமணியன் உரை பாடல் - 140)

எனவரும் பாடலடிகளால் அறியலாம்.

தலைவன் பிரிந்து சென்றதினால் அப்பிரிவினைப் பொருத்துக் கொள்ளாத என்னுடைய முறுக்கு வளையணிந்த என்தோள்கள் மெலிந்து பொலிவிழந்தன என்பதனை,

*"யான் எவன் செய்கோ? பாண ! ஆனாது*
*மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்*
*புல்லென் றனஎன் புரிவளைத் தோளே !"*

என்று தன்னுடைய துன்பத்தைக் கூறுகிறாள் தலைவி.

செறிவான ஒளிவீசும் வளைகள் ஒலி வீசாதவாறு எழுவாயாக என்று தலைவியைத் தோழி துயில் எழுப்புவதை,

*"இலங்குவீங்கு எல்வளை! ஆய்நுதல் கவினப்*
*பொலந்தேர்க் கொண்கன் வந்தனன் இனியே"*

(ஐங்குறுநூறு ச.வே. சுப்பிரமணியன் உரை - பாடல் 200)

என்ற பாடலடியின் மூலம் அறியலாம்.

கடற்சங்கினை அரத்தால் பிளந்து அறுத்துச் செய்யப் பெற்ற அழகிய வளையல்களையும், தொடியினையும் அணிந்த தலைவி என்பதனை,

*"கடற்கோடு அறுத்த, அரம்போழ் அவ்வளை"*
(ஐங்குறுநூறு ச.வே.சு. உரை. பாட - 194)

என வரும் பாடல்களில் அவ்வளை என்பது அழகான வளை என்பதாகும். தலைவன் தந்த வளையல்கள் மென்மையானது என்பதனை,

*"அறைபினல் வால்வளை நல்லவோ தாமே"*

என்ற பாடலால் அறியலாம். இப்பாடலில் உள்ள வால்வளை என்பது கடற்சங்கால் செய்யப்பட்ட வெண்மையான வளையலைக் குறிப்பதாகும்.

**மகளிர் அணியும் தொடி**

தொடி என்பது மகளிர் அணியும் அணிகலன்களுள் ஒன்றாகும். நெய்தல் திணையில் ஒண்தொடி, ஆய்தொடி, சூதார் குறுந்தெடி என்னும் தொடி வகைகள் கூறப்படுகின்றன.

ஒளிவீசும் அழகிய தொடியினை உடையவள் மடப்பம் பொருந்திய தலைவியானவள் என்பதை,

*"ஒண்தொடி மடவரல் கண்டிவரும்; கொண்க!"*

(ஐங்குறுநூறு ச.வே.சு. உரை - பாடல் 194)

என்ற பாடலடியின் வழி அறியலாம். தலைவ்னின் பிரிவால் வளையல்கள் நெகிழத் தோழிக்கு மெலிவு ஏற்பட்டது என்பதை,

*"தண்சேறு களவன் வரிக்கும் ஊரற்கு*
*ஒண்தொடி நெகிழச் சாஅய்,"*

(ஐங்குறுநூறு ச.வே.சு. உரை பா. 28)

எனவரும் பாடலால் அறியலாம். சங்குகளை அறுத்துச் செய்த ஒளிமிக்க வளையல்களையும், செழிப்பான பலவாகிய கூந்தலையுமுடைய அழகிய ஒளிவீசும் தோள்வளை அணிந்த தலைவி என்பதை,

*"கோடுசீர் எல்வளை, கொழும்பல் கூந்தல்,*
*ஆய்தெடி, மடவரல் வேண்டுதி ஆயின்"*

(ஐங்குறுநூறு, ச.வே.சு. உரை. பாட - 196)

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலால் அறியலாம்.

ஒளிவீசும் அழகான தொடிகளை அணிந்துள்ளனர் பரத்தையர்கள் என்பதை,

*"சூதுஆர் குறுந்தொடிச் சூர்அமை நுடக்கத்து*
*நின்வெங் காதலி தழீஇ நெருநை"*

(ஐங்குறுநூறு, ச.வே.சு. உரை - பாடல் - 71)

எனவரும் பாடல்களால் ஐங்குறுநூற்றில் நெய்தல் திணை மகளிர் அழகியத் தொடியணிந்து தன்னை அழகுபடுத்திக் கொண்டனர் என்பதை அறியமுடிகிறது.

## கழுத்தணியாகிய இழை

இழை என்பது கழுத்தில் அணியும் அணிகலன்களில் ஒன்றாகும். அவற்றுள் ஒள்ளிழை, நுண்ணிழை என்ற இரண்டு இழைகள் கூறப்பட்டுள்ளன.

தன் ஒள்ளிய இழையானது மணல்மேட்டிலே வீழ்ந்ததென்று, மிகவும் வருந்தியவளாக, அருகே காணப்பட்ட வெள்ளாங்குருவினைப் பார்த்துத் தலைவி நீ கண்டாயோ? என்று கூறுவதை,

*"........நின்கேள்*

*ஒள்ளிழை உயர்மணல் வீழ்ந்தென*

*வெள்ளாங் குருகை வினவு வோளே"*

(ஐங்குறுநூறு ச.வே.சு. உரை. பா. 122)

என்ற பாடலின் மூலம் அறியலாம். நுண்ணிய வேலைப் பாடமைந்த இழையினை அணிந்தவள் தலைவி என்பதை,

*"மணங்கமழ் பொழிற்குறி நல்கினள் நுணங்கிழை"*

(ஐங்குறுநூறு ச.வே.சு. உரை - பாடல் 174)

என்ற பாடல் அடியின் வழி அறியலாம். முண்டகப் பூவை மாலையாகச் சூடிக் கொண்டு கடலில் நீராடுவது நெய்தல் மகளிர் இயல்பு என்பதனை,

*"முண்டகக் கோதை நனையத்*

*தொண்டிரைப் பௌவம் பாய்ந்துநின் றோளே!"*

(ஐங்குறுநூறு - கிழவற்உரைத்த பத்து - ச.வே.சு. உரை - 121)

என்ற பாடலடிகளின் மூலம் மாலை அணிந்து கொண்டு கடலில் நீராடும் வழக்கம் அக்காலத்தில் இருந்ததை அறியமுடிகிறது.

*"தும்பை மாலை இளமலை*

*நுண்பூண் ஆகம் விலங்கு வோளே"*

எனவரும் பாடலில் தலைவி தும்பை மாலை அணிந்திருந்தாள் என்பதை அறியமுடிகிறது. மேற்காணும் பாடல்களின் வாயிலாகக்

கழுத்தணிகளுக்குச் சிறப்பிடம் கொடுத்து நுண்மையான வேலைப்பாடமைந்த அணிகலன்களைத் தன்னை அழகாக்கிக் கொள்ள அணிந்திருந்தனர் என்பதை அறியமுடிகிறது.

## ஆண்களின் அணிகலன்

நெய்தல் நிலத்தில் தலைவன் தாரணிந்தான் என்பது மட்டுமே காணப்படுகிறது. மற்ற அணிகலன்கள் பற்றிய தகவல் ஏதுமில்லை.

*"தண்தார் அகலம் தலைத்தலைக் கொளவே"*

(ஐங் - தோழிக்குரைத்தப் பத்து - பாடல் - 33)

எனவரும் பாடலால் அறியலாம்.

தலைவன் நெய்தலின் நீலப்பூவினையும், செருத்தியின் பொன்னிறப் பூவினையும், கலந்து கட்டிய கதம்ப மாலையை மார்பிலே அணிந்தவன் என்பதை,

*"நெய்தல் நறுமலர் செருத்தியோடு விரைஇக்*
*கைபுனை நறுந்தார் கமழும் மார்பன்"*

(ஐங்குறுநூறு - நெய்தற்பத்து - ச.வே.சு. உரை - பா. 182)

என்ற பாடல்களின் வாயிலாக ஆண்களுக்கு குறிப்பிட்டுச் சொல்லும்படியான அணிகலன்கள் ஏதும் இல்லை என்பதையும் மலர்களால் ஆன மாலையையே அணிந்தனர் என்ற செய்தியையும் அறிய முடிகிறது.

## நிறைவாக

ஐங்குறுநூற்றில் அணிகலன்கள் என்னும் தலைப்பில் அமைந்த இக்கட்டுரையில் குறிஞ்சிநில மக்களே முதன்முதலாக அணிகலன்களை கண்டறிந்தனர் என்பதையும், நெய்தல் நில மக்கள் இலங்குவளை, செறிவளை, புரிவளை, எல்வளை போன்ற வளையல்களை அணிந்தனர் என்பதையும், ஒண்தொடி, ஆய்தொடி, சூதார் குறுந்தொடி என்னும் தொடியையும் அணிந்தனர் என்றும் அறியப்படுகிறது. மேலும் கழுத்தணியாகிய ஒள்ளிழை, நுண்ணிழை மற்றும் மலர்களால் ஆன மாலையைச் சூடிக் கொண்டு கடலில் நீராடுவது மகளிரின் பழக்கமாக இருந்ததையும், தலைவனுக்குரிய அணிகலன்களாகத் தாரணிதல் மட்டுமே காணப்படுகிறது என்பதையும் இக்கட்டுரையில் கண்டோம்.

# செம்மொழித் தமிழும் சட்ட நுணுக்கங்களும்

*முனைவர் க. சின்னப்பா*

## முன்னுரை

இரண்டாயிரமாண்டு பழமையான பண்பாட்டுப் பின்புலத்தைக் கொண்டவர்கள் தமிழர்கள். மிகப் பழங்காலந்தொட்டே 'அரசு' என்ற அமைப்பை நிறுவி நாடாண்டவர்கள். அதனால் தமிழர்களிடையே சிறப்பான நிர்வாக முறையும் இருந்து வந்துள்ளது. சிறப்பான நிர்வாகம் அமையச் சட்ட முறைமை அவசியம். எனவே இதனடிப்படையில் தமிழர்தம் சட்ட நுணுக்கங்களை ஆய்வுக்குட்படுத்தும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

## சங்க இலக்கியங்களில்

சங்க காலத்திலேயே சேர, சோழ, பாண்டியர்கள் தமிழகத்தைச் சிறப்பாக ஆண்டுள்ளனர். தமது ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பினைச் சிறப்பாக நிர்வாகம் செய்துள்ளனர். அரசு நிர்வாகம் செம்மையுற நடைபெற வேண்டுமானால் அதற்குச் சட்ட முறைமை அவசியமாகிறது. எனவே இந்தச் சட்ட முறைமைகளை, அரசு இயந்திரத்தின் செயல்பாட்டைச் சங்க இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.

புறநானூற்றில் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய பணிகள் கடைமை என்கிற பெயரில் சுட்டப்பட்டுள்ளன. ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய கடமைகளைப் பொன்முடியார்,

*ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே*
*சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே*
*வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே*
*நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே*
*ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கி*
*களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே* (புறம் : 312)

என்று வரிசைப்படுத்துகிறார். தாய், தந்தை, கொல்லன், மன்னன், வீரன் ஆகியோர் அனைவரும் செய்ய வேண்டிய கடமைகளை, பணியை இப்பாடல் சட்டம், முறைமை என்ற தொனியோடு குறிப்பிடுகிறது.

சங்க காலத்தில் சட்டம் என்பது அரசனை மையப்படுத்தி இருந்துள்ளது. அவன் திருவாய் மலர்ந்தருளும் சொற்கள் ஒவ்வொன்றும் சட்ட மதிப்பைப் பெற்றன. எனவே அவன் இறைநிலையில் வைக்கப்பட்டான். இதனை,

*நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே*
*மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்*
*அதனால் யான் உயிர் என்பது அறிகை*
*வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே* (புறம் : 186)

என்று புறநானூறு குறிப்பிடுகிறது. மன்னன்தான் உலகத்தில் அனைத்துமாகவும் உள்ளான். எனவே குடிமக்களைக் காப்பது அவனது கடமை என்பதை இப்பாடல் வலியுறுத்துகிறது.

அரசனின் பெருமையை, அவனது கடமையை வலியுறுத்திப் பாடும் புலவர்கள், மறுபுறம் அரசனின் செயல்பாடுகளைக் கண்டித்தும் பாடுகின்றனர். குடிமக்களைப் பாதுகாக்காது அவர்களை துயர்படுத்தும் பாண்டியனை நோக்கிப் பிசிராந்தையார்,

*காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே*
*மாநிறை வல்லதும் பன்னாட் காகும்*
*நூறுசெறு வாயினும் தமித்துப்புக் குணினே*
*வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்*
*அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே*
*கோடி யாத்து நாடு பெரிது நந்தும்*
*மெல்லியன் கிழவனாகி வைகலும்*
*வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு*
*பரிவுதப கெடுக்கும் பிண்ட நச்சின்*
*யானை புக்க புலம்போலத்*
*தானும் உண்ணான் உலகமும் கெடுமே* (புறம் : 184)

என்று குறிப்பிடுகிறார். மன்னன் மக்களைக் காக்க வேண்டும். மாறாக அதிகமான வரியினை விதித்து மக்களை வதைக்கக்கூடாது என்பதை

'யானை புக்க புலம் போல' எனும் உவமையின் வழி பிசிராந்தையார் எடுத்துரைக்கிறார். இதன் வழியாகச் சங்க காலத்தில் மன்னர்களே மக்களைக் காக்கும் கடமை கொண்டவர்களாக இருந்துள்ளதை அறியமுடிகிறது.

## நீதி இலக்கியங்களில் சட்ட முறைமை

நீதி இலக்கியங்கள் யாவும் மக்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்ற அக்கறையில் தோன்றியவையாக உள்ளன. எனவே இவைகளில் சட்ட நடைமுறைகள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. வள்ளுவர் அரசு மற்றும் தனிநபர் சார்ந்த சட்ட நடைமுறையைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். அரசன் முறை செய்து வாழவேண்டும். அவ்வாறு வாழ்ந்தால் அம்முறைமையே அவனைப் பாதுகாக்கும் என்கிறார் வள்ளுவர். இதனை வள்ளுவர்,

*இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை*
*முறைகாக்கும் முட்டாச் செயின்* (குறள் : 547)

என்று குறிப்பிடுகிறார். இங்கு வள்ளுவர் முறை என்பதனை 'சட்டம்' என்ற பொருளிலேயே பயன்படுத்துகிறார் எனத் துணியலாம்.

வள்ளுவர் சட்டத்தின்படி தவறிழைத்தவர்களைத் தண்டிக்க வேண்டும் என்பதையும் குறிப்பிடுகிறார்.

*குடிபுறம் காத்தோம்பிக் குற்றம் கடிதல்*
*வடுஅன்று வேந்தன் தொழில்* (குறள் : 549)

என்று தவறிழைத்தவர்களைப் பற்றிக் குறிப்பிடும் வள்ளுவர், அவர்களைத் தண்டித்தல் வடுவன்று. அது வேந்தன் தொழில் என்கிறார். மேலும் வள்ளுவர் தவறிழைத்தார்களைத் தண்டித்தலைக் களையெடுப்பிற்குச் சமமாகச் சுட்டுகிறார். இதனை வள்ளுவர்,

*கொலையில் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்*
*களைகட் டதனோடு நேர்* (குறள் : 550)

என்று குறிப்பிடுகிறார்.

நண்பர், பகைவர் என்று பார்க்காமல் யார்மாட்டும் தேர்ந்து செய்வதுதான் முறை என்கிறார் வள்ளுவர்.

*ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்*
*தேர்ந்து செய்வஃதே முறை* (குறள் : 541)

என்று குறிப்பிடும் வள்ளுவர் சட்ட நடைமுறை (முறைமை) என்பது அனைவருக்கும் பொதுவானதே என்று குறிப்பிடுகிறார்.

பழமொழி நானூறு கரிகாலன் நீதி செய்த முறைமையினைக் கூறுவதன் வாயிலாக அன்றிருந்த வழக்கு நடைமுறையினை,

*உரைமுடிவு காணான் இளமையோன் என்ற*
*நரைமுது மக்கள் உவப்ப – நரைமுடித்துச்*
*சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை*
*கல்லாமல் பாகம் படும்.* (பழமொழி : 6)

என்று குறிப்பிடுகிறது. இதன் வாயிலாக நீதி சொல்பவன் பல நூற்களைக் கற்றறிந்தவனாக, முதியோனாக, அனுபவம் மிக்கவனாக இருக்க வேண்டும் என்று இருந்த நடைமுறையினை அறியமுடிகிறது. இவ்வாறாக நீதி இலக்கியங்கள் முறைமை, அறம், நீதி என்கிற பெயர்களில் சட்ட நடைமுறையை வலியுறுத்திப் பேசுகின்றன.

## காப்பியங்களில் சட்ட முறைமை

காப்பியங்களைப் பொறுத்தவரையில் சிலப்பதிகாரத்தில் சட்ட நடைமுறைகள் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. கண்ணகி தன்னுடைய வாதத்தினைத் தேர்ந்த வழக்கறிஞனைப் போல முன் வைத்துப் பேசுகிறாள். தன் வாதத்தின் தொடக்கத்திலேயே இதுவரை நடந்த நீதி முறைமைகளை,

*தேரா மன்னா செப்புவதுடையேன்*
*எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்*
*புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்*
*வாயிற் கடைமணி நடுநா நடுங்க*
*ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத் தான்தன்*
*அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்*
*பெரும்பெயர்ப் புகாரென் பதியே* (சிலம்பு : 20 : 50–56)

என்று வரிசைப்படுத்தி எடுத்துரைக்கிறாள். இதன் வாயிலாகத் தமது நாடான சோழநாட்டின் சட்ட முறைமைகளின் நடுநிலைத் தன்மையைப்

பாண்டியனுக்கு எடுத்துரைக்கிறாள் கண்ணகி. மேலும் தன் பக்கமுள்ள நியாயத்தை எடுத்துக்கூறி அதனை நிறுவும் பணியையும் கண்ணகி சிறப்பாகச் செய்கிறாள்.

*கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று* (சிலம்பு : 20 : 64)

என்று மன்னன் தனது தரப்பு நியாயத்தினைக் கூறுகின்ற பொழுது அதனைத் தக்க சான்று காட்டி மறுக்கிறாள். தன்னுடைய காற்சிலம்புகள் மாணிக்கப் பரலை உடையவை என்று சொல்லி அதனை நிறுவுகிறாள்.

*நற்றிறம் படராக் கொற்கை வேந்தே*
*என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியேயென*
(சிலம்பு : 20 : 28-29)

எனக் கண்ணகி வழக்குரைத்து தனது தரப்பு நியாயத்தை நிருபிக்கிறாள். கண்ணகி ஒரு வழக்கறிஞரைப் போல் செயல்பட்ட பாங்கை இங்கு உணரமுடிகிறது.

சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பெறும் எண்பேராயமும், ஐம்பெருங்குழுவும் நீதிமன்றம் போலவே செயல்பட்டுள்ளன. எனவே இம்மன்றங்கள் ஒரு குறிப்பிட்ட சட்ட வரையறைகளின் படியே செயல்பட்டிருக்க வேண்டும். சிலப்பதிகாரத்தில் பொய்சாட்சி சொல்லும் முறை வழக்கில் இருந்துள்ளது. இதனைச் சிம்பு

*அறை போகமைச்சர் பிறர்மனை நயப்போர்*
*பொய் கரியாளர் புறங் கூறாளர்* (சிலம்பு : 25 : 130 - 131)

என்று குறிப்பிடுகிறது. பொய் சாட்சி சொல்லும் முறை இருந்தால் அங்கு சட்ட நடைமுறைகள் சிறப்பாக நடைமுறையில் இருந்து வந்ததாகத் தான் கருத முடியும்.

## பெரிய புராணத்தில் சட்ட முறைமை

பெரியபுராணம் தடுத்தாட்கொண்ட புராணத்திலுள்ள சிவபெருமான் - சுந்தரர் ஆகியோருக்கு இடையிலான வழக்கு சிறப்பான வாதத் திறனை முன்வைக்கிறது. குற்றம் சாட்டுகின்றவர் அதனைச் சரியான சான்றுகளின் வழி நிறுவ வேண்டும் என்பது நடைமுறை. எனவே சுந்தரர் தனக்கு அடிமை என்பதனை ஓலை கொண்டு நிறுவுகிறார் சிவன்.

*என்னுடையு நின்னுடையு நின்றவிசை வால்யான்*
*முன்னுடைய தோர்பெரு வழக்கினை முடித்தே*
*நின்னுடைய வேள்வியினை முறி*

(திருத்தொண்டர் புராணம், பா. 181)

என்று கிழவேதியராக வந்த சிவன் பேசுகிறார். சுந்தரர் தனக்கு அடிமை. அதற்கான சான்று என்னிடம் உள்ளது. அதனை மறுத்துவிட்டு நீ திருமணம் முடித்துக்கொள் என்கிறார் சிவன். உடனே சுந்தரர் நான் அடிமை என்று நீ சொல்வது உண்மையானால் அவ்வோலையைக் காட்டு என்கிறார்.

*உண்டொரா வோலை யென்னும் மதனுண்மை அறிவேனென்று*
*தொண்டனா ரோலை காட்டு கென்றனர் துணைவனாரை*

(திருத்தொண்டர் புராணம், பா. 188)

என்று சுந்தரர் பேசுகிறார். வேதியரே நான் அடிமை என்று எமது முன்னோர் எழுதிக்காட்டிய அந்த ஆவணத்தைக் காட்டு என்கிறார் சுந்தரர். கிழ வேதியராய் நின்ற சிவன் ஓலையைக் காட்டுகிறார். உடனே சுந்தரர் அவ்வோலையைப் பறித்து நெருப்பிலிட்டு விடுகிறார். இதனைப் பார்த்த சிவன் நீ நெருப்பிலிட்டது படியோலை. மூலவோலை என்னிடம் உள்ளது. அதனைக் கொண்டு வந்து நீ அடிமை என்பதை நிரூபிப்பேன் என்கிறார்.

*வேதிய னதனைக் கேளா வெண்ணெய் நல்லூரிலேநீ*
*போதிவ நன்று மற்றப் புனிதநான் மறையோர் முன்னர்*
*ஆதியின் மூலவோலை காட்டி நீ யடிமை யாதல்*
*சாதிப்பனென்று முன்னே தண்டுமுன் தங்கச் சென்றான்*

(திருத்தொண்டர் புராணம் : பா. 195)

என்று வேதியராய் நின்ற சிவன் சொல்கிறார். மூலவோலை என்னிடம் பாதுகாப்பாக உள்ளது. அவ்வோலை கொண்டு நீ அடிமை என்பதை நிரூபிப்பேன் என்கிறார் சிவன். ஆவணங்களின் அடிப்படையில் வழக்கினை நிகழ்த்தும் போக்கு பெரியபுராணத்தில் சிறப்பாக விளக்கப்பெற்றுள்ளது. மேலும் ஆவணங்களைப் படியெடுத்துப் பாதுகாக்கும் முறை இருந்துள்ளதைப் பெரியபுராணத்தின் வழி அறியமுடிகிறது. எனவே பெரியபுராண காலத்தில் வழக்குகள் ஆவணம், சாட்சி முதலியவற்றின் அடிப்படையில் விசாரிக்கப்பட்டு தீர்வு கூறப்பட முறைமையை உணரமுடிகிறது.

பெரிய புராணம் மனுநீதிச் சோழன் கதையிலும் சட்ட நடைமுறை உணர்த்தப்படுகிறது. அரசன் செல்லும் அரச வீதியிலேயே சோழனின் மகன் செல்கிறான். அந்நேரத்தில் பயமறியாத இளங்கன்றொன்று அவனது தேர்ச் சக்கரத்தில் சிக்கி இறந்துவிடுகிறது. இதில் அரசகுமாரனின்மேல் தவறு ஒன்றும் இல்லை. பசுவின் கன்றுதான் தவறாக வந்து, அடிபட்டு இறந்துவிடுகிறது. இருப்பினும் பசுவின் துயரைத் தன் துயர் போல் கருதுகிறான் சோழமன்னன். எனவே தன் மகனையும் தேர்க்காலால் ஏற்றுகிறான். இதன்மூலம் துன்பத்திற்கு மற்றொரு துன்பம் என்று அக்காலத்திய சட்ட நடைமுறை வெளிப்படுத்தப்படுகிறது.

*ஒருமைந்தன் தன்குலத்து*

*உள்ளான் என்பதும் உணரான்*

*தருமம்தன் வழிசெல்கை*

*கடனென்னு கடன்மைந்தன்*

*மருமம்தன் தேராழி*

*உறவூர்ந்தான் மனுவேந்தன்*

(திருத்தொண்டர் புராணம், திருநகரச் சிறப்பு பா. 44)

என்று பெரியபுராணம் மனுநீதிச் சோழன் முறை செய்த செயலை விளக்குகிறது. மனுநீதிச் சோழனுக்கு ஒரு மகன்தான் உள்ளான். இருப்பினும் தருமத்தைக் காக்க வேண்டும் என்பதற்காகத் தன்மகனைத் தேர்க்காலில் இடுகிறான். இவ்வாறு விலங்குகளின் மீதும் அன்பு காட்டுவதே தமிழர்தம் முறைமையாக இருந்து வந்துள்ளது.

## முடிவுரை

தமிழகத்தில் முடியாட்சி நிலவி வந்துள்ளது. எனவே மன்னர்களின் வாக்குத்தான் சட்டமாக இருந்துள்ளது. இருப்பினும் மன்னர்கள் அறத்தின்படி நடந்து தமது நாட்டையும், மக்களையும் பாதுகாத்துள்ளனர். தமிழகத்தைப் பொருத்தவரையில் எழுதப்பட்ட சட்டம் எதுவும் கிடையாது. ஆனால் மரபு வழியாக வந்த ஒழுக்க முறைமைகளையே சட்டமாகக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர். முன்னோர் எவ்வழி சமூகத்தை வழிநடத்திச் சென்றனரோ அவ்வழியே பின்னோரும் சென்றுள்ளனர். தமிழகத்தின் சட்ட மரபானது எழுதப்படவில்லையாயினும் அது மரபின் பின்புலத்தைக் கொண்டு சிறப்பாகவே செயல்படுத்தப்பட்டு வந்துள்ளது.

# செந்தமிழ்க் கல்லூரி

## 54ஆம் பட்டமளிப்பு விழாப் பேருரை


**டாக்டர் நீதிபதி ஏ.ஆர். லெட்சுமணன்** அவர்கள்

முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி, முன்னாள் தலைவர், இந்தியச் சட்ட ஆணையம்


*மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர்*
திரு. **இரா. அழகுமலை** அவர்களே

*செந்தமிழ்க் கல்லூரியின் செயலாளர்*
திரு. **இரா. குருசாமி** அவர்களே

*கல்லூரி முதல்வர் (பொ)*
திரு. **சு. விசயன்** அவர்களே

*சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர்கள்*
திரு. **சு. வீரணசாமி** அவர்களே

திரு. **க. முத்தையா பசும்பொன்** அவர்களே

இந்தப் பட்டமளிப்பு விழாப் பேருரையாற்றுவதில் நான் பெரு மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன். தேசியக் கவிஞர் பாரதியார் சொல்லியது போல 'இது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.'

இதற்கு முன்பு நான் பல பட்டமளிப்பு விழாப் பேருரையாற்றிப் பட்டங்களையும் வழங்கியிருக்கிறேன். அவையெல்லாம் தமிழ் அல்லாத வேறு துறையைச் சார்ந்தவை, அயல் மொழியாம் ஆங்கிலத்தில் என்னால் நிகழ்த்தப் பெற்றவை. மேலும் அவை வேறு பல ஊர்களில் நிகழ்த்தப் பெற்றவை. இந்தப் பட்டமளிப்புப் பேருரையொன்றுதான் நம் உயிரினும் மேலான தமிழ்மொழியில், தமிழ்ப்பட்டம் பெற்ற மாணவர்களுக்காக, தமிழ் வளர்த்த மாமதுரையில், நான் கல்லூரிக் கல்வி பயின்ற இந்த மண்ணில், என்னால் நிகழ்த்தப் பெறுகின்றது.

தமிழ் மொழியில், இந்தக் கல்லூரியில், மதுரை மாநகரில் பட்டம் பெறும் நீங்கள் தமிழின் பெருமை குறித்தும், இந்தக் கல்லூரியின் வரலாறு பற்றியும், மதுரையின் வரலாறு குறித்தும் நன்கு அறிவீர்கள்.

தமிழ் : தமிழ் செம்மொழி என்று அண்மையில் நமது நடுவண் அரசால் ஏற்றுக் கொள்ளப் பெற்று அதிகார முறையிலும் அறிவிக்கப் பெற்றுள்ளது.

இது அரசாங்க அளவிலான ஒரு ஏற்புதான். ஆனால் நமது மொழி 'உயர் தனிச் செம்மொழி' என்று நமது நாட்டு அறிஞர்களால் மட்டுமன்றி, உலகமெங்கணும் இருந்த, இருக்கின்ற தமிழறிஞர்களால் நேற்றும், இன்றும் ஏற்றுக்கொள்ளப் பெற்ற பெருமையுடையது.

தமது சமய நெறிகளைப் பரப்பத் தமிழகம் வந்த ஜி.யு. போப், தமது பெயரை மாற்றி வீரமாமுனிவர் என்று அழைக்கப் பெற்ற பெஸ்கி, கால்டுவெல் போன்ற நேற்றைய அறிஞர்கள், தமிழை ஆழ்ந்து கற்று அதன் பெருமையைப் பாராட்டியதோடு தமது நூல்களாலும் தொண்டுகளாலும் அதன் அழகுக்கு அழகு சேர்த்தனர்.

தமிழை நன்கு கற்று அதனை உலக மொழிகளோடு ஒப்பிட்டு உண்மை உரைக்கும் இன்றைய மேல் நாட்டு அறிஞர்களான டாக்டர் ஜார்ஜ் ஹார்ட் என்ற அமெரிக்கர், டாக்டர் கமில் ஸ்வலபெல் என்ற செக்கோஸ்லோவாக்கியர் போன்றோரும் தமிழின் பெருமையை உள்ளவாறு உணர்ந்து உரைத்து வருகின்றனர்.

ஆயினும், நமது தமிழ் மொழியின் அழகை உணர்ந்து அதன் செம்மொழித் தன்மையை உள்ளவாறு உணர்ந்து 'உயர்தனிச் செம்மொழி' என்று கண்டு பாராட்டிய பெருமை – சூரிய நாராயண சாஸ்திரி என்ற தனது பெயரைத் தமிழின் மேலிருந்த ஆழ்ந்த பற்றின் காரணமாக – அந்நாளிலேயே மாற்றிக் கொண்ட பரிதிமாற் கலைஞரையே சாரும். இத்தருணத்தில் அந்த மாமனிதர் இருந்த திசை நோக்கி வணங்குகிறேன்.

ஒரு மொழியைச் செம்மொழியாக அறிவிக்க நான்கு அடிப்படைத் தகுதிகளை அறிஞர் குழு வரையறுத்துள்ளது.

1. அந்த மொழியின் பழமை, 1500 முதல் 2000 ஆண்டு வரை இருத்தல் வேண்டும்.
2. காலந்தோறும் பாராட்டப்படும் பழைய இலக்கிய வளம், அதாவது ஒரு தொடராகச் சங்கிலி போல இழையோடுதல் வேண்டும்.
3. வேறு மொழியின் துணையின்றி நிற்கும் தனித்தன்மை.
4. இன்றைய நவீன இலக்கியத்தினின்றும் வேறாக நிற்பது.

இந்த நான்கு தகுதிகளையும் தமிழ் மொழிக்கு அளவுகோலாக நீங்கள் பயன்படுத்தினால் ஓர் உண்மை உங்களுக்கு எளிதாகப் புரியும். இந்தத் தகுதிகளே தமிழ்மொழியிலிருந்து எடுக்கப்பட்டவை என்ற உண்மையே அது.

"தொன்று நிகழ்ந்தது அனைத்தும்

உணர்ந்திடும் சூழ்கலை வாணர்களும் இவள்

என்று பிறந்தவளாம் என்று உணராத இயல்பின ளாம்

எங்கள் தாய்"

என்று பாரதியார் பாடியிருப்பது போல நமது தமிழ் மொழி மிகப் பழமையானது.

ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய தொல்காப்பியத்தை இன்றும் நம்மால் படிக்க முடிகின்றது.

எந்த மொழியின் சார்புமின்றி தனித்து நிற்கவல்ல திறன் நம் மொழிக்கு உண்டு. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை எழுதிய கால்டுவெல் என்ற மேனாட்டு அறிஞர் இந்தத் தனித்தன்மையைத் தான் பாராட்டுகின்றார்.

இத்தகைய சிறப்பு மிக்க தமிழ் மொழியில் பட்டம் பெறும் உங்களை வாழ்த்துகிறேன்.

இவ்வேளையில், இக்கல்லூரி தோன்றுவதற்கு,

இக்கல்லூரிக்குத் தாய் நிறுவனமான தமிழ்ச்சங்கத்திற்கு –

முச்சங்கத்திற்குப் பின் தோன்றிய நான்காவது தமிழ்ச்சங்கத்திற்கு வித்திட்ட பொன். பாண்டித்துரை தேவர் அவர்களுக்கும் வணக்கம் செலுத்துகிறேன்.

1901ஆம் ஆண்டு மே மாதம் 21, 22, 23 ஆகிய நாள்களில் சென்னை மாகாண அரசியல் மாநாடு மதுரை மாநகரில் கூடியது. அதன் பொருட்டு அரசியல் துறை வல்லுநர்களும், அறிஞர்களும் அப்பெருநகரில் கூடினர். அக்கூட்டத்திற்கு நம் வள்ளல் துணைத் தலைவராயிருந்து, நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த பிரதிநிதிகளை வரவேற்றுச் சொற்பொழிவு ஆற்றினார். மூன்று நாள்கள் கூடிப் பல அரசியல் தீர்மானங்களை அம்மகாசபை நிறைவேற்றியது. அதன் முடிவில் பாண்டித்துரையார் தம் வேண்டுகோளொன்றை அச்சபையோர்க்கு வெளியிட்டார். தமிழ் வளர்ச்சி பெருகியிருந்த மதுரை மாநகரின் பழம் பெருமைகளையும், அதன் வளர்ச்சி குன்றிய தற்கால நிலையையும் சுருங்கக்கூறி அந்நகரில் தமிழ் மொழி நிலைபெற்று வளர்வதற்குச் சங்கம் ஒன்றை உருவாக்க விரும்புவதாகவும், மறுநாள் சேதுபதி பள்ளி மண்டபத்தில் கூடப்போகும் பேரவைக்கு மாநாட்டுப் பிரதிநிதிகளும் நகரமக்களும் கலந்துகொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். மறுநாள் கூடிய கூட்டத்தில் தமிழ்ச்சங்கம் அமைப்பது ஒருமனதாக நிறைவேறியது. இம்மாநாடே நான்காம் தமிழ்ச்சங்கம் தோன்றுவதற்குக் கருவாய் அமைந்தது.

எண்ணற்ற அரிய நூல்களைப் பதிப்பிப்பதற்குப் பொருள் உதவி வழங்கிய வள்ளல் – அவரே பல நூல்களை இயற்றிய அருந்தமிழ்ப் புலவர் – அவர் வாழ்வையும் பணியையும் நீங்கள் நன்கு அறிவீர்கள். அவருக்கு வணக்கம் செலுத்துவோம்.

சிதறிக் கிடந்த பழந்தமிழ் ஓலைச் சுவடிகளைத் தேடி எடுத்து, நவீன முறையில் அச்சு வாகனம் ஏற்ற அரும்பாடுபட்ட தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாத

ஐயர் அவர்கள், நமது வள்ளலைச் சந்திக்கப் பலமுறை இராமநாதபுரத்திற்கு வந்தவர், தேவரின் ஆழ்ந்த தமிழ் புலமையைக் கண்டு வியந்தார். ஐயர் அவர்களின் தூண்டுதலினாலே மதுரையில் நம் தேவர் அவர்கள் இச்சங்கத்தைத் தோற்றுவித்தார்கள்.

## மதுரைத் தமிழ்ச்சங்கம்

நான்காவது தமிழ்ச்சங்கம் மன்னர் பாண்டித்துரைத் தேவரால் நிறுவப்பெற்றது ஒரு அரிய வரலாறு.

முதற்சங்கம் தென் மதுரையிலும், இரண்டாம் தமிழ்ச்சங்கம் கபாடபுரத்திலும் இருந்து சுவடு தெரியாமலேயே போய்விட்டது. மூன்றவாது தமிழ்ச்சங்கம் இந்த மதுரையில் இருந்து பாண்டிய மன்னர்களால் வளர்க்கப் பெற்ற செய்தி பதிவு செய்யப் பெற்றுள்ளது.

காலப் போக்கில் எண்ணற்ற வரலாற்று மாற்றங்கள் நிகழ்ந்தன. ஆயினும் தமிழ்மொழி மட்டும் ஒரு தொடர்போல அவ்வக் காலத்தில் வளர்ந்து வந்திருக்கிறது.

சங்க காலம், இடைக்காலம், சமயகாலம், புராண காலம், பிற்காலம், நவீனகாலம் என இவற்றை வரையறுக்கலாம்.

தமிழ் அறிஞர்களும், அருளாளர்களும், ஆங்காங்கே சிதறிக் கிடந்தனர். அவர்கள் தங்கி இளைப்பாற ஒரு இடம் வேண்டுமென்று பலரும் நினைத்தனர். சிதறிக் கிடந்த பழந்தமிழ் ஓலைச் சுவடிகளைத தேடி எடுத்து நவீனமுறையில் அச்சுவாகனம் ஏற்ற அரும்பாடுபட்டார் தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாத ஐயர். கும்பகோணம் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றிய அவருக்குப் போதிய நிதியில்லை, மதி நிரம்ப இருந்தது.

அவர்தான் நமது நிறுவனர் பாண்டித்துரைத் தேவர் என்ற சுடர்விளக்கை ஒளி கூட்டியவர். தாம் பதிப்பிக்கும் நூல்களுக்கு நிதியுதவிகேட்டு வள்ளலைச் சந்திக்கப் பலமுறை இராமநாதபுரத்திற்கு வந்தவர், வள்ளல் பாண்டித்துரைத் தேவரின் ஆழ்ந்த தமிழ்ப் புலமையைக் கண்டு வியந்தார்.

உ.வே. சாமிநாத ஐயர் அவர்களும் பிற நல்லறிஞர்களும் தமிழுக்காக ஓர் அமைப்பைத் தோற்றுவித்து, வளர்க்க அவரை அறிவுறுத்திக் கேட்டுக்கொண்டனர்.

அவர்களின் தூண்டுதலினால் மதுரையில் பாண்டித்துரைத் தேவர் அவர்களால் இச்சங்கம் தோற்றுவிக்கப் பெற்றது. உங்கள் கல்லூரிக்கு

அருகிலுள்ள சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் இச்சங்கம் கால்கோள் கண்டது என்பது இன்னும் பெருமை சேர்ப்பது. ஏனென்றால் நமது தேசியக் கவிஞர் பாரதியார் அந்தப் பள்ளியில் தான் சில காலம் பணியாற்றினார்.

பாண்டித்துரைத் தேவரின் ஆழ்ந்த தமிழ்ப்பற்றிற்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டை நல்குவேன். அந்நாளில் மதுரையில் இருந்த ஆங்கிலேயர் ஒருவர் திருக்குறளைத் தனக்குத் தோன்றிய வகையில் பதிப்பித்தாராம். அதில் எண்ணற்ற பிழைகள் இருப்பதைக் கண்டு கடுங்கோபம் கொண்ட நமது பாண்டித்துரைத் தேவர் அவரைக் கடுமையாகச் சாடியதோடு, அந்தத் திருக்குறள் பதிப்பு நூல் அனைத்தையும் தாமே வாங்கித் தீயிட்டுக் கொளுத்தினாராம்.

அத்தகைய தமிழ் மறவர் தோற்றுவித்த கல்லூரியில் கற்ற நீங்கள் 'நாங்கள் எல்லாம் ஒருகூட்டின் பறவைகள்' என்று மார்தட்டித் தமிழை வளர்க்க வாழ்த்துகிறேன்.

**பட்டங்கள் ஆள்வோம்**

இறுதியாக ஒரு சொல். பட்டம் என்பது ஒரு பணியைப் பெறுவதற்கான தகுதிச்சீட்டு மட்டுமன்று. பேருந்தில் பயணம் செய்யவும் நாடக அரங்கில் அமரவும் நாம் பெறும் அனுமதிச்சீட்டும் அன்று. மாறாக உங்களை முழுமனிதர்களாக ஆக்கியதற்காக வழங்கப்படும் தகுதிச்சீட்டு – தகுதிச் சான்றிதழ்.

அதனால்தான் பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் என்று பாரதியார் பாடினார். பட்டங்கள் உங்களை ஆட்சி செய்ய விடாதீர்கள். பட்டங்களை உங்களது தகுதிகளால், ஆளுமையால் நீங்கள் ஆளுங்கள். தீமைகள் மாயவும் நன்மைகள் பெருகவும், அறியாமை இருள் அகலவும் அறிவுச்சுடர் மலரவும் நீங்கள் இன்றுபெறும் பட்டங்களைப் பயன்படுத்துங்கள். உலகப் புகழ்பெற்ற இந்த மாமதுரையில் கல்விகற்ற உங்களுக்கும் அதுதான் பெருமை. உலகமெங்கும் புகழ் பரப்பி உங்களுக்குப் பட்டமளிக்கும் எனக்கும் அதுதான் பெருமை கொள்பவர் - கொடுப்பவர் இருவரது பெருமையையும் காப்பாற்றும் வகைசெய்வீர் என உங்களைப் பாராட்டி இப்பட்டங்களை வழங்குகிறேன்.

நன்றி ! வணக்கம்.

# ஆற்றுப்படையில் நிலவியல் அமைப்பும் வாழ்வாதாரமும்

திருமிகு. அ. ஓவம்மாள் எம்.ஃபில். தமிழ்
சிவகாசி

பண்டைய மக்களின் நிலவியலறிவு, இயற்கை நாட்டம் குறித்த செய்திகள் சங்கப் பாடல்களில் பொதிந்துள்ளன. பறவை, விலங்கு, தாவரம், குன்று, மலை, ஆறு, சூரியன், சந்திரன் போன்ற இயற்கைத் தோற்றங்களை கூர்ந்து நோக்கியுள்ளனர். இயற்கைப் பொருளின் இயல்புகளை வைத்து நிலத்திற்கு பெயரிட்டுள்ளனர். இயற்கையைச் சார்ந்தே அவர்களின் வாழ்வாதாரம் இருந்துள்ளது. பத்துப்பாட்டில் இடம் பெறும் பாணர், பொருநர்களின் வாழ்வாதாரத்தை அறிவதற்கு நிலவியல் அமைப்பை ஆராய்தல் அவசியமாகின்றது.

## நிலப்பகுப்பு

வாழ்வதற்குரிய இடமாகிய நிலப்பரப்பை மலை, காடு, வயல், கடல், மணற்பரப்பு என ஐந்து வகையாகப் பாகுபடுத்தியுள்ளனர். கைக்கிளை முதலாகப் பெருந்திணை இறுதியாக ஏழு திணைகள் பகுக்கப்பட்டது அத்திணைகளாகும்.

*"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்*
*முற்படக் கிளந்த எழுதிணை என்ப"*

நிலப்பின்னணி அடிப்படையில் நான்கு திணைகளை தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

*"அவற்றுள்,*
*நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்*
*படுதிரை வையம் பாத்திய பண்பே"*

அவற்றுள் நடுவிலுள்ள முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை என்னும் ஐந்திணைகளில் பாலைத்திணை நீங்கலாக ஏனைய நான்கு திணைகளுக்கும் நிலம் சுட்டப்பட்டுள்ளது.

*"மாயோன் மேய காடுறை உலகமும்*

*..................................................*

*சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"*

என்னும் நூற்பா வாயிலாக மாயோன் பொருந்திருக்கும் காடு சேயோன் பொருந்தியிருக்கும் மேகங்கள் சூழ்ந்த மலை, இந்திரன் பொருந்தியிருக்கும் இனிய நீர் நிலைகள் நிறைந்த வயல், வருணன் பொருந்தியிருக்கும் கடல் சார்ந்த பெருமணல் இவை முறையே முன்னோர் சொன்ன முறைப்படி, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று நிலவியல் அடிப்படையில் வரிசைப்படுத்தப்படுகின்றன.

## நிலத்தின் தன்மை

ஐவகை நிலம் தன்மையால் வேறுபட்டிருந்தன. நிலத்தின் தன்மையே அந்நில மக்களின் வாழ்வியலை வடிவமைத்தன. மெல்லிய மணற்பரப்பையும், நிலச்சூழலையும் பெற்றவை 'மென்புலம்' எனப்பட்டன. கடினமான நிலச் சூழலமைந்தவை 'வன்புலம்' எனப்பட்டன. மருதம், நெய்தல், நிலத்தின் தன்மை பற்றி மென்புலமாகக் கொள்ளப்பட்டது. குறிஞ்சி முல்லை பாலை என்பவை 'வன்புலம்' எனப்பட்டன.

## முல்லை நில வாழ்க்கை

ஆயர் வாழ்க்கை முழுவதும் ஆநிரையைப் பேணிப் பாதுகாத்துப் பயன் பெறுதலை அடிப்படையாகக் கொண்டது. இவர்களுள் உழவுத் தொழில் செய்வோரும் உள்ளனர். இவர்களது நடைமுறை வாழ்க்கை ஆநிரையைப் பராமரித்து வாழ்பவர்களிடமிருந்து மாறுபட்டதாகும். ஆயர் நடைமுறை வாழ்க்கை வைகறை, காலை, பகல், மாலை, இரவு என்ற காலங்களில் நோக்குதற்குரியதாக அமைந்துள்ளது.

## ஆயர் வாழ்விடம் - குடில்

ஆயர் குடில்கள் புல்லால் வேயப் பெற்றன. சிற்றில் முள்ளிட்டுக் கட்டிய வேலியை உடையன. வளைந்த கால்களை உடைய பந்தரைக் கொண்டன. குடில் முழுவதும் புதுக்கலம் போன்ற செம்மண் பூசப் பெற்றிருக்கும்.

*"முரண் தலை கழிந்த பின்றை மறிய*

*குளகு அரை யாத்த குறுங்கால் குரம்பை"* (பெரும். 147 - 148)

என்பதை மேற்கண்ட பாடல் மூலம் இவர்களது குடிசைகளில் ஆடுகள் தின்னும் பொருட்டுச் சிறிய கால்களில் தழைகள் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும். 'காடும் காடு சார்ந்த இடமும்' என்ற நிலவியல் அமைப்பை ஒட்டிய வாழ்வாதாரம் இம்மக்களிடம் இருந்துள்ளது.

## நிலவியலும் உணவாதாரமும்

ஆயர் காலை, நண்பகல், இரவு ஆகியவற்றில் எவ்வெக்காலங்களில் எவ்வெவ்விதமான உணவு சமைத்தனர் என்பதை ஆற்றுப்படை நூல்களில் தெளிவாக அறிய இயலவில்லை. ஆனாலும் ஆயர் மகளிர் உணவு சமைத்த நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. ஆயர் மகளிர் வரகுச் சோற்றையும், வேளைப்பூவைத் தயிரில் பெய்து செய்த புளிங்கூழையும் உணவாக ஆக்குவர். வரகினது சிறிய அவிழாகிய சோற்றை அவரை விதையின் பருப்பை அதிகமாக விட்டுத் துழாவி உணவு சமைப்பர்.

*"நெடுங்குரல் பூளைப் பூவின் அன்னை*

..........................................................

*இன் சுவை மூரல்"* (பெரும். 192-196)

என்பதை மேற்கண்ட பாடல் மூலம் வரகின் வெள்ளிய அரிசியைச் சுனை நீரொடு முகந்து, மண்பானையில் அவிழாகிய சோற்றை ஆக்குவர். இதனைக் கற்கள் அடுக்கி அமைத்த அடுப்பில் செய்வர். முற்றிய தயிரை உலை நீராக வைப்பர். அதில் வரகரிசியுடன் ஈயலையும் இட்டுப் புளிப்பு வாய்ந்த விருப்பம் தரும் சோற்றினை ஆக்குவர். இவ்வாறு கால் நடையில் பெறப்பட்ட பால் சார்ந்த உணவினை அதிகம் பயன்படுத்தியுள்ளனர்.

## குறிஞ்சி நில வாழ்க்கை

குறிஞ்சி மலையும் மலைசார்ந்த நிலமுமாகும். இங்கு வாழும் மக்களைக் குறவர், கானவர் என வழங்குவர். மலையின் பக்கத்தே உள்ள சிறிய ஊர்களில் வாழ்வர். இவர்கள் குடியிருப்பு 'பாக்கம்' 'சிறு குடி' எனப்பெறும். கானவர் பகற்பொழுதின் பெரும்பகுதியை வேட்டையாடுவதில் கழிப்பர். "வேட்டையாடி உணவு சேகரிக்கும் பழங்குடிகள் பெரும்பாலும் தனித்தனியாக சிறு குழுக்களாகப் பிரிந்து செல்வர்." கானவர் அகன்ற நிலப் பிளவின் வாயிலில் வார்களால் பின்னப்பட்ட கண்ணியும் வலையும் அமைப்பர். பன்றியை வேட்டை நாய்களைக் கொண்டு ஏவித் துரத்தி அப்பிளவில் விழச் செய்வர். அவை வலையில் பட்டுச் சிக்குறும். அதனைத் தம் சிறுகுடிக்குக் கொண்டு

வருவர். வேட்டை நாய்களுடன் பசிய தூறுகளை அடித்து வேலியில் தொடர் வலைகளைக் கட்டிக் குறுமுயல்களை அவ்வலையகத்தே வளைத்துப் பிடிப்பர்.

*''அரைநாள் வேட்டம் அழுங்கின் பகல்நாள்*

*...............................................................*

*கருங்கண் கானவர் கடறு கூட்டுண்ணும்''* (பெரும். 111 - 116)

என்பதை பெரும்பாணாற்றுப் பாடல்கள் பறை சாற்றுகின்றன.

## நிலவியலும் உணவாதாரமும்

குறவர் தினைச்சோறு, இறைச்சி, பலாப்பழம் ஆகியவற்றைப் பகற்பொழுதில் உணவாகக் கொள்வர். பலாப்பழமும் அதன் விதைகளும் குறவர்க்கு எளிதாக இயற்கையாகக் கிடைக்கும் உணவு ஆகும். குறிஞ்சி நில மக்கள் தம் தேவைகளைப் பண்டமாற்று மூலம் நிறைவேற்றிக் கொள்வர். தம் நிலத்துப் பொருட்களை வேற்று நிலங்களுக்குக் கொண்டு சென்று தமக்குத் தேவையானவற்றைப் பெறுவர்.

ஆமாவின் இறைச்சியுடன் களிற்றியானையின் கோட்டையும் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, அவற்றின் விலைக்கு ஈடாகப் பொன்னையும் கள்ளையும் பெறுவர்.

*''செங்கோட்டு ஆமான் ஊனொடு காட்ட*

*...............................................................*

*பொன்னுடை நியமித்துப் பிழிநொடை கொடுக்கும்''*

என்பதை பதிற்றுப்பத்து பாடல் மூலம் பண்டமாற்று முறையை அறியலாம். சிறுகுடியிலுள்ள குறவர் உணவின்றிப் பசித்தாராயின் யானைக் கோட்டை விற்று அவ்விலையில் உணவைக் கொள்வர். தேனையும், கிழங்கையும் நெய்தல் நிலத்துக்குக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு அதற்கு விலையாக மீன் நெய்யையும், நறவையும் பெறுவர்.

*''தேன் நெய்யொடு கிழங்கு மாறியோர்*

*மீன் நெய்யொடு நறவு மறுகவும்''* (பொருந. 214 - 215)

என்பதைப் பொருநராற்றுப் பாடல் மூலம் அறியலாம்.

குறவர் தினைச்சோறு, இறைச்சி, பலாப்பழம் ஆகியவற்றைப் பகற்பொழுதில் உணவாகக் கொள்வர். பலாப்பழமும் அதன் விதைகளும் குறவர்க்கு எளிதாக இயற்கையாகக் கிடைக்கும் உணவு ஆகும்.

## பாலை நில வாழ்க்கை

பாலைக்குத் தனி நிலம் இல்லை. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பாலை நிலத்தினைப் பின்வருமாறு காட்சிப்படுத்துகின்றார்.

*''முல்லையுங் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து*
*நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்தப்*
*பாலை யென்ப தோர் படிவங் கொள்ளும்''*

முல்லையும் குறிஞ்சியும் தத்தம் இயல்பு குன்றும் பொழுது பாலை எனப்பெறும். இங்கு வாழும் மக்கள் வாழ்க்கை, முல்லை நில மக்கள் வாழ்க்கையாகவோ, குறிஞ்சி நில மக்கள் வாழ்க்கையாகவோ அமையாமல் தனித்த தன்மையுடையதாகும். இங்கு எயினர், வேட்டுவர், மறவர், மழவர் என்னும் நான்கு வகையினர் வாழ்ந்துள்ளனர். இவ்வகையினர் ஒவ்வொருவரது நடைமுறை வாழ்க்கையையும் தனித்தனியாகக் காணத்தக்கதாகும்.

## எயினர் வாழ்விடம்

எயினர் ஈந்து வேயப்பட்ட குடிசையில் வாழ்வர். இவர்கள் வாழும் ஊர் சீறூர் எனப்பெறும். இது தலை கூம்பிய குடிசைகளைக் கொண்டது.

*''குவிந்த குரம்பை அங்குடிச் சீறூர்''*

என்பதை இவர்களது நடைமுறை வாழ்வில் பகற்பொழுது நிகழ்வுகள் மட்டும் காணப்பெறும். அவற்றுள் புல்லரிசி திரட்டல், பூவிற்றல், ஊன் உலர்த்தல், உணவு சமைத்தல் என்பன குறிக்கத்தக்கனவாகும்.

## நிலவியலும் உணவாதாரமும்

பாலை நில மக்கள் அப்பகுதியில் எவ்வளவு வறட்சி ஏற்பட்டாலும் அங்கிருந்து செல்லாமல் அப்பகுதியிலேயே வாழ்ந்துள்ளனர். வறட்சியின் காரணமாகப் புல்லரிசி திரட்டி உண்டுள்ளனர். புல்லரிசி என்பது எறும்பு, கரையான் போன்றவை நிலத்துக்கடியில் ம்ழைக்காலத்துக்காகச் சேகரித்து வைத்திருக்கும் அரிசியாகும். எயினர் தமக்கு உணவு இன்மையால்

நிலத்தைத் தோண்டி, புல்லரிசியினைத் திரட்டுவர். பாலை நிலம் முழுவதும் சென்று பகற் பொழுதில் புல்லரிசி திரட்டுவர்.

*"மான்தோல் பள்ளி மகவொடு முடங்கி*

.............................................................

*குறுங்காழ் உலக்கை ஓச்சி நெடுங்கிணற்று"* (பெரும். 89-97)

ஈன்ற நோவு காரணமாக எயிற்றி புல்லரிசி கொணரச் செல்லவில்லை என்ற மேற்கண்ட பாடல் குறிப்பிடுவது மூலம் மகளிரும் உணவு தேடுதலில் ஈடுபட்டமை புலனாகின்றது.

## மருதநில வாழ்க்கை

மருத நிலம் வயலும் வயல் சார்ந்த பகுதியாகும். இங்கு வாழும் மக்கள் உழவர் எனப் பெறுவர். இவர்கள் பண்பட்ட வேளாண்மையைச் செய்வர். இவர்களது உழவு சார்ந்த நடைமுறை வாழ்க்கையைச் சங்க இலக்கியங்கள் நன்குணர்த்துகின்றன. உழவர் பருவமழை பெய்ததும் நிலத்தை உழுதல், விதைத்தல், நாற்றுநடுதல், களையெடுத்தல், காவல் காத்தல், அறுவடை, நெற்கட்டுகளைக் களங்களுக்குக் கொண்டு வருதல், கடாவிடுதல், நெல் அளத்தல் ஆகிய உழவு சார்ந்த நடைமுறை வாழ்க்கை நிகழ்வுகளாகும்.

## நிலவியலும் உணவாதாரமும்

நெற்களத்தில் கள்விற்றல், கள்ளுக்கு பண்டமாற்றாக உழத்தியரிடம் உணவு பெறுதல் பகற்பொழுது நிலத்தில் வாழும் தண்டலை உழவர், வலைஞர், பூ வலைஞர் ஆகியோரது வாழ்க்கை ஆகும். உழவர் விடியற்காலையில் பழஞ்சோற்றை உணவாகக் கொள்வர் என்பது பற்றி புறநானூறு பகர்கிறது. வெண்ணெல் அரிச்சோறு சமைப்பர். அதனை நண்டின் கலவையோடு உண்பர்.

*"கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவிர்"* (சிறு. 195)

என்பவை மருத நில உணவு வகைகளைப் பற்றி பறைசாற்றுகின்றன. வெள்ளிய சோற்றை மனையின்கண் உள்ள கோழிப்பெடையினாற் சமைத்த பொரியலோடு உண்பர் என்ற செய்தியைப் பெரும்பாணாற்றுப் பாடல் மூலம் புலனாகிறது. உழவர் மகளிர் வேண்டும் பொழுது நெல்லை எடுத்துக் குற்றி அரிசியாக்குவர். இதனைப் புறநானூற்றுப் பாடல் வாயிலாக ஐயூர் முடவனார் விளக்குகிறார். இரும்புப் பூணிட்ட உலக்கையால் நெல்லினைக் குற்றி அரிசியாக்குவர்.

நெல் குற்றும் விதத்தினை

> *"இருங்காழ் உலக்கை இரும்பு முகம் தேய்த்த*
> *அவைப்பு மாண் அரிசி அமலை"* (சிறு. 193-194)

என்ற சிறுபாணாற்றுப் பாடல் வழி அறியலாம்.

## நெய்தல் நில வாழ்க்கை

கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தலாகும். இங்கு வாழும் மக்கள் பரதவர் எனப்படுவர். பரதவர் வாழ்க்கை முழுவதும் கடலொடு தொடர்புடையதாகும். கடல் அலையின் தன்மை, காற்று, தட்பவெப்பநிலை இவற்றுக்கேற்ப, கடலுக்குள் செல்வர். அதனால் காலை, பகல், இரவு ஆகிய எல்லாக் காலங்களிலும் மீன்பிடிக்கச் செல்வது நடைமுறை ஆகும். நாட்காலையிலும் பகலிலும் மீன்பிடிக்கச் செல்வோர் மாலையில் கரை திரும்புவர். இரவில் மீன் பிடிக்கச் செல்வோர் நாட்காலையில் கரை திரும்புவர்.

பரதவர் மீன் பிடித்தலோடு உப்பு விளைத்தல், முத்தெடுத்தல் போன்ற செயல்களிலும் ஈடுபடுவர். மகளிர் பகற்பொழுதில் பரதவர் பிடித்து வந்த மீன்களை விற்பர். மீதமுள்ளவற்றைக் காய வைப்பர். பொழுது போக்காகப் பல விளையாட்டுகளை ஆடி மகிழ்வர். கடலையே நம்பி வாழும் பரதவர் வாழ்க்கை பகல், மாலை, இரவு என்ற பொழுதுகளில் காணத்தக்கதாக உள்ளது.

பரதவர் குடியிருப்புகள் பாக்கம் என வழங்கப்பெறும். இதனை அகநானூற்றுப் பாடல் வழி அறியலாம். பரதவர் வேழக்கோலை நிரைத்து மரக் கொம்புகளை இடையிடையே கலந்து, தாழை நாரால் கட்டித் தருப்பைப் புல்வேயப்பட்ட சிறிய தாழ்வாரமுடைய குடிலில் வாழ்வர் என்பதைப் பெரும்பாணாற்றுப் பாடல் மூலமும் அறியலாம்.

## நிலவியலும் உணவாதாரமும்

பரதவர் இறால் மீன்களின் சுடப்பட்ட தசையினையும், ஆமைப் புழுக்கின் இறைச்சியையும் உணவாகக் கொள்வர். பரதவ மகளிர், குற்றாத கொழியலரிசியைக் களியாகத் துழாவிக் கூழாக அடுவர். அதனை மலர்ந்த வாயுடைய, தட்டுப் பிழாவில் இட்டு உலரும் படி ஆற்றுவர். நல்ல முளையை இடித்துச் சேர்ப்பர். அதனை இரண்டு பகலும் இரண்டு இரவும் கழித்துச் சாடியில் இட்டு வெந்நீரில் வேக விடுவர். நெய்யரியால் வடிகட்டிக் கள்ளைப் பிரித்தெடுப்பர்.

*"அவையா அரிசி அம் களித் துழவை*

*......................................................*

*வெந்நீர் அரியல் விரல் அலை நறும்பிழி"* (பெரும். 275-281)

என்ற பாடல் மூலமும், மேலும் நுளையர் மகளிர் காய்ச்சி அரித்த தேறலையும் உலர்ந்த குழல் மீனையும் எப்பொழுதும் தம் மனையில் செய்து வைத்திருப்பர்.

*"நுதி வேல் நோக்கின் நுளை மகள் அரித்த*

*பழம்படு தேறல் பரதவர்"* (சிறு. 158-159)

என்பதை சிறுபாணாற்றுப்பாடல் மூலமும் பரதவர் உணவு நிலையை அறிய முடிகிறது.

## தொகுப்புரை

நிலத்தின் தன்மைகளுக்கு ஏற்ப மக்களின் வாழ்வியல் அமைந்துள்ளன. உணவுப் பழக்கமும் நிலத்திற்கேற்ப மாறுபடுகின்றது. ஆயர்களின் வாழ்விடம் 'காடும் காடு சார்ந்த இடமும்' என்ற நிலவியல் அமைப்பை ஒட்டியே அமைகின்றது. காடுகள் உறைவிடமாக இருப்பதால் கால்நடை வளர்ப்பு சிறப்புற்றிருந்துள்ளது. குறிஞ்சி நில மக்கள் மலைச் சாரலில் வாழ்ந்துள்ளனர். ஆண், பெண் இருபாலரும் தினைப்புனம் காத்தலில் ஈடுபட்டுள்ளனர். பாலை நில மக்களின் உணவு மற்றைய பிரிவினரை விட மாறுபட்டதாகக் காணப்படுகின்றது. மருத நில மக்களின் வாழ்வியல் வளமையாக இருந்துள்ளது. உழுதல், நடுதல், களையெடுத்தல் என வயல் சார்ந்த தொழில் முறைகளைச் செய்துள்ளனர். பாணர், பொருநருக்கு இந்நில மக்களே பலவகையான நெல்லரிசி உணவுகளை விருந்தாகப் படைத்துள்ளனர். மேலும் மருத நிலம் வளமாக இருந்ததால் கள் குடித்தல் அச்சமுதாயத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நெய்தல் நில மக்களின் வாழ்வியல் கடலை ஒட்டியே அமைந்துள்ளது. உணவுப் பொருட்கள் கடல்சார் பொருளாகவோ அதற்கு மாற்றான பண்டமாற்றுப் பொருளாகவோ இருந்துள்ளது.

# சிலப்பதிகாரம் - காற்சிலம்பு ஓசையிலே, புனைவியல் கூறுகள்

*ச. இராஜ்குமார்*
அண்ணாமலை நகர்

## புனைவியல்

புனையியல் என்பதை நடப்பியலுக்கு மாறான இயக்கம் என்பர். இது கற்பனைக்கு முதலிடம் தருவது, இலக்கிய வடிவங்களில் வாழ்க்கையை உள்ளது உள்ளபடியே காட்டாமல் கற்பனைப் புனைவு கலந்து உணர்ச்சிகொள்ள வைப்பதாகும். இது நடப்பியலுக்கு மட்டுமின்றி இயற்பண்பிற்கும் எதிரானது.

புனைதல் என்ற சொல் தமிழகராதியில் தரித்தல், அழகு செய்தல், சிறப்பித்தல், கற்பித்தல், கட்டுதல் என்று பொருள்படும்.

ஓர் இலக்கியத்தின் கூறுகளாவன உணர்ச்சி, கற்பனை, வடிவம், கருத்து போன்றவை. இக்கூறுகள் கவிதையில் புனையப்படும் விதமே 'புனைவு' என்று அழைக்கப்படுகின்றது.

கவிதையின் கூறுகள் எவ்வாறு புனையப்படுகின்றன என்பதைப் பொறுத்தே கவிதையின் அழகு அமைகிறது. ஒரு கவிதையின் மையக்கருத்தை உணர்த்தவே புலவர்கள் புனைவுகளை அமைக்கின்றனர்.

ஓர் இலக்கியத்திற்கு வடிவம் இன்றியமையாத ஒன்றாகும்; படைப்பாளன் தான் சொல்ல விழைகின்ற கருத்தைப் படிப்போரிடம் தெளிவாகக் கொண்டு சேர்க்க கவிதையின் கூறுகள் புனையப்படும் விதமே பயன்படுகின்றது.

கற்பனை, உணர்ச்சி, தன்னுணர்ச்சிப் புலப்பாடு கடந்த காலத்தின் மீது பற்று, இயற்கை ஈடுபாடு, இயற்கை நிகழ்ச்சிகளில் நம்பிக்கை ஆகியவற்றோடு காதலும், வீரமும் செறிந்து படைக்கப்படுவதனைப் புனைவியலுக்குரிய பண்புகளாகக் கருதலாம். தீவிரமான சமூக எதிர்ப்பு, அறிந்து கொள்ள இயலாத புதிரான போக்கு கற்பனைத் தேரில் உலா வருதல், உணர்ச்சி வளையத்துள் செறிந்து கிடத்தல் முதலானவற்றைப்

புனைவியலின் அடையாளச் சின்னங்கள் எனலாம். இவை மனிதனை முழுமையாகப் புரிய வைக்கும் கலையாகிய இலக்கியத்தோடு நெருங்கிய தொடர்புடையது.

மனித மன ஓட்டங்களோடு சேர்த்து மனிதனை முழுமையாகப் புரிய வைக்கின்ற கலைநுணுக்கங்களோடு இலக்கியம் எழுத்து வடிவம் பெறுகின்றபோது அது வாழும் இலக்கியமாகின்றது. மனித சமுதாயத்திற்கு மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தக்கூடிய மனிதாபிமான செய்திகளைக் கருவாகக் கொண்டவை இலக்கியப் படைப்புக்கள். அந்தப் படைப்புகளுக்குரிய எழுத்தாளனுக்கு என்றேனும் ஒருநாள் அங்கீகாரம் கிட்டும். அவன் மறைந்த பின்பும், அவன் படைத்தளித்துள்ள இலக்கியம் அவன் பெயரை உச்சரித்துக் கொண்டே இருக்கும். நல்ல இலக்கியத்தை இனம் காண்பது நல்ல வாழ்க்கை எதுவென இனம் காண்பதைப் போன்றதாகும் என்பர்.

ஐம்பெருங்காப்பியங்களுள் முதன்மை பெற்றதான சிலப்பதிகாரத்தைப் புதுக்கவிதை வடிவில் கவிஞர் பா. விஜய் 'காற்சிலம்பு ஓசையிலே' என்ற தலைப்பில் காவியமாக்கியுள்ளார். வடிவமாற்றத்தைப் பெற்ற அக்காவியம் தன் மூல நூலிலிருந்து வேறு மாற்றங்களைப் பெறவில்லை. எனினும் சிலம்பில் தன்னை ஈர்த்த இடங்களையும், சிறப்பான நிகழ்ச்சிகளையும் உணர்வுப் பூர்வமாக அழகியல் உணர்வோடு படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மனிதன் எதிர்நோக்கும் புதிய வாழ்வியல் நெறியை அமைக்க இலக்கியம் தன் முழு ஆற்றலையும் பயன்படுத்தி, வரலாற்றுப் பாதையில் தன் கருவையும், உருவையும் மாற்றிக் கொண்டே வருகின்றது.

## இலக்கியத்தில் மானிட உண்மைகள்

மனித உணர்வுகளுக்கு மதிப்பளித்து, மனிதனை மனிதனாக உணரவைப்பது மனிதநேயம். தன்னைப் போலத்தான் பிற உயிரும் என்பதைச் சொல்லால் மட்டுமல்ல, செயலாலும் அறிந்து செயலாற்றுபவன் உண்மையில் மனிதன்.

மானுடம் எங்கு மறுதலிக்கப்படுகிறதோ அங்கு மாற்றங்கள் தோன்றுவதில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படைத் தேவைகளாக அமையும் உணவு, உடை, உறையுள் ஆகியவை கிடைக்கப் பெற்று மனம் நிறைவேறிய பின்புதான் கலைகளிலும், அழகிலும் மனம் ஈடுபடும் என்பதை வலியுறுத்துகின்றனர். யதார்த்த உலகத்தைக உணர்ந்து கொள்கின்ற ஒருவனால் புனைவியல் நயங்களையும் உணர்ந்து கொள்ள முடியும்.

## சிலம்பும் காப்பியமும்

பலவந்தமாகவோ, தர்க்கக ரீதியாக ஏற்பட்ட தீவிர வளர்ச்சிகளின் செயற்பாட்டாலோ காவியத் தலைவியாக ஆக்கப்பட்ட கண்ணகி, ஆசிரியருக்கு மிகத் தேவையான காவியப் பொருளாக அமைகிறாள். மதுரை மாநகர மக்களின் அனுதாபத்திற்கும் உரியவளாகி மாறிப் போகின்றாள்.

பழிக்குப்பழி வாங்கும் செய்கைகளில் ஈடுபடும்போது கடவுளையே சந்தேகிப்பது போல் காணப்படுகிறது. விதி என்ற தத்துவத்தை உதறித் தள்ளிவிட்டுத் தெய்வங்களை ஏவல் கொள்ளும் போது விதி அவளிடம் சரணடைகின்றது என்று கூறுவர்.

*''யானமர் காதலன் தன்னைத் தவறிழைத்த*
*கோநகர் சீறினேன் குற்றமிலேன் யான் என்று*
*இடமுலை கையால் திருகி மதுரை*
*வலமுறை மும்முறை வாரா அலமந்து*
*மட்டார் மறகின் மணிமுலையை வட்டித்து''*

(சிலம்பு. 15 : 78 - 82)

இச்சிலப்பதிகார வரிகளைத் தம் உள்ளத்திலே ஏற்று உணர்ச்சிகளில் புகுத்தி எழுத்துக்களில் அதிசயம் செய்திருக்கிறார் கவிஞர் பா. விஜய்.

*''ஊ....ஊ..... என*
*ஊர்க்காற்று அலற..*
*பேய்......பேய்......எனப்*
*பெருநகர் அலைபாய.....*
*தூள்....தூள்..... என*
*துர்க்கையானாள் கண்ணகி''* (காற்சிலம்பு ஓசையிலே, ப. 164)

*'இரண்டு முலையினையும்*
*அறுத்து தூரப் போட்டாள்*
*முலை விழுந்த இடத்தில்*
*மூண்டெரிந்தது யுகத்தீ''* (காற்சிலம்பு ஓசையிலே ஈ க. 98)

மானிடப் பிறவியும், இரக்கமும் கொண்ட கதாநாயகி மனிதர்கள்

முன்னிலையில் மிகச் சாதாரணமான தெய்வமாக மாறுகின்றாள். அமைதி, பொறுமை என்பன வாய்க்கப் பெற்று மனித மனங்களை உருகச் செய்யும் கண்ணகியைக் 'கமில் சுவலபில்' கிரேக்க நாட்டுக் கதாநாயகி ஒருத்தியுடன் ஒப்பிட்டாய்கிறார் (Zevelabil Kamil, The Lady of the Anklet, 1973 : 312).

காப்பியத்தின் இறுதிப்பகுதியில் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு விழா எடுக்கின்றான். அப்போது இளங்கோ தானும் அதற்குக் காட்சியானது போலத் தன்னையும் கதையினுட் புகுத்திக் கொள்கிறார்.

*"யானும் சென்றேன் என் எதிர் எழுந்து......"*

என்ற சிலம்பின் நிகழ்வினை உள்வாங்கிக் கொண்ட கவிஞர் பா. விஜய் குறிப்பிடும் போது வாசகரைக் கவிதையுடன் பிணைத்து, குடமுழுக்கு விழாவிற்கே அழைத்துச் சென்றுவிட்டார். இளங்கோவடிகளும் தன்னைக் கதையினுட் புகுத்திய காட்சியை எடுத்தியம்பும் போது,

*"சூரியன் வானத்தில்*
*பளீரென்றது எழுந்தபின்*
*விழா அரங்கினுள்*
*நுழைந்தார்*
*இளங்கோவடிகள்"* (காற்சிலம்பு ஓசையிலே ப. 127)

என்று கூறுகிறார்.

### புகார்க்காண்டம்

சிலம்பில் அமைந்த கதைத் தலைவியின் வர்ணனையை இன்னும் மெருகேற்றி வர்ணித்திருக்கிறார் கவிஞர் பா. விஜய்.

*"சுவருக்குச் சந்தனம் மெழுகும்*
*அவருக்குத்*
*திருமகள் வடிவில்*
*ஒருமகள்!*
*அந்த உயிர் நிலாவின்*
*பெயர்*
*கண்ணகி*

*கருப்பு நிறத்திலொரு*

*நெருப்பு!* (காற்சிலம்பு ஓசையிலே, பாகம் - 1, ப. 16)

எனத் தன் வர்ணனைகளைத் தொடங்கி அவளது, கண்களைக் காந்தத்திற்கும், இமைகளைப் படபடக்கும் வெற்றிலைக்கும், நெற்றியினை மூன்றாம் பிறைக்கும், பாதுகை அன்னப்பறவையின் இறகிற்கும், பாதங்களைத் தாமரைக்கும், குரலைக் குயிலின் குரலிற்கும், உவமைப்படுத்தி வர்ணிக்கின்றார். வர்ணனையின் உச்சகட்டமாக உதடுகளை மன்மத மாளிகைக் கதவுகளாய் வர்ணிக்கின்றார். ஓர் கதைத் தலைவிக்குள்ள அத்துனை அம்சங்களையும் சாறுபிழிந்து ஊற்றியிருக்கின்றார் 'கண்ணகி' என்ற பெயருடைய மங்கைக்கு.

## மனை அறம் படுத்த காதை

கணவனும் மனைவியுமாகிய கோவலனும், கண்ணகியும் இல்லறம் நடத்திய செய்தியைக் இளங்கோவடிகள் கூறுகின்றார். ஏழடுக்கு மாளிகையில் உணர்வில் இன்பம் ஊற்றெடுக்க இருவரும் காமனும் ரதியும் போல, நிலா முற்றத்தைச் சென்று அடைந்தனர். கண்ணகியின் அழகைக் கோவலன் புகழ்வதைக் கவிஞர் அழகாகச் சித்திரிக்கின்றார்.

*''மாசறு பொன்னே வலம்புரி முத்தே*

*காசறு விரையே கரும்பே தேனே''* (சிலம்பு. 4 : 88-89)

கோவலன் கண்ணகியின் அழகு நலத்தை இப்படி எல்லாம் போற்றிப் பாராட்டி, அழகு மலர் மாலை போல் விளங்கிய கண்ணகியுடன் கூடி மகிழ்ந்து இல்லறம் நடத்தி இனிது வாழ்ந்திருந்தான். கோவலனும், கண்ணகியும், கொடிய நாகப்பாம்புகள். ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தது போல கூடிக்கலந்து இன்புறுவராயினர் என்பதை இளங்கோவடிகள்

*''தூமப் பணிகள் ஒன்றித் தோய்ந்தால் என ஒருவன்*

*காமர் மனைவி எனக் கைகலந்து - நாமம்''* (சிலம்பு. 4 : 187 - 179)

என வர்ணிக்கின்றார்.

இதனையே கவிஞர் பா. விஜய்,
*''குளித்த நிலையில்,*

*பன்னிரண்டு மணிக்*

*கடிகாரமாய்க்*

*கட்டிலில் கிடந்தனர்*

*கண்ணகியும், கோவலனும்!''*

(காற்சிலம்பு ஓசையிலே பாகம் - 1, ப. 55)

இவ்வாறு இருவரும் அழகு நலம் கெடாத இல்லற இன்பத்தை இடையறாது துய்த்த மகிழ்ந்திருந்தனர்.

**அரங்கேற்றுக் காதை**

அவ்வூரில் வாழ்ந்த சித்திராபதி என்ற நாடகக் கணிகையின் மகள் மாதவி. அழகிலும் ஆடல் பாடல்களிலும் சிறந்து விளங்கினாள். மாதவியின் அழகை வர்ணிக்கும் நோக்கில் கவிஞர் பா. விஜய்.

*''குழந்தையைக் கூடக்*
*குனிந்து தூக்காத*
*வீரப் புருஷர்களையும்*
*ஒரு புருவ அசைவில்*
*புடவைக்குக் கொசுவம்*
*மடிக்க வைப்பாளாமே''*

(காற்சிலம்பு ஓசையிலே, பாகம் - 1, ப. 99)

என்ற வரிகளில் கற்பனையால் வரைய முடியாத காவியத்தைப் படைத்திருக்கிறார். கவிதையில் அழகில் வாசகரும் தன்னை மறந்து மனம் கரையும் நிலையினைக் கவிஞர்கள் ஏற்படுத்தி விடுகின்றனர்.

பதினொரு வகை ஆடல்களை ஆடி, கண்டாரை ஈர்க்கும் மாதவி, நடனம் ஆடும்போதே கோவலனின் இதயம் படும்பாட்டை அழகாகச் சித்தரிக்கின்றார்.

*''முன் வரிசையில் சோழ மன்னனோடும்*
*முக்கியஸ்தர்களோடும்*
*அமர்ந்திருந்த*
*கோவலனின் இதயமும்*
*ஆடத் துவங்கியது* (காற்சிலம்பு ஓசையிலே, பாகம் - 1, ப. 98)

மாதவி என்ற பாத்திரத்தை மிக நுட்பமாக, இளங்கோ வழிநடத்திச் சென்றதைப் போலவே தன் கவிதையிலும் வழிநடத்தியிருக்கிறார் கவிஞர் பா. விஜய்.

மாதவி பரிசு பெற்ற செய்தியறிந்த கோவலன் தலைவரிசையை அவளுக்களித்து அவள் இல்லத்திலே தன் மனைவியை மறந்து

வாழ்வானாயினான். இதனையே கவிஞர் பா. விஜய்,

*''கோவலனின் காலத்தில்*
*ஓவியமாக வந்தது !*
*கோடாகி நின்றது !*
*கோடாக விழுந்தது*
*ஓவியமாகிப் போனது!*
*கோவலனின் வாழ்க்கையில்*
*செந்தமிழ் வந்தது*
*வழிப்போக்கரானது!*
*வழிப்போக்கராய் வந்தது*
*சொந்தமாகிக் கொண்டது!''*
(காற்சிலம்பு ஓசையிலே, பாகம் - 1, ப. 155)

என்று பாடுகின்றார். இவ்வாறு கோவலனின் வாழ்க்கை திசை திரும்பும் போக்கை அழகாகக் கோடிட்டுக் காண்பித்திருக்கின்றார்.

அக்காலத்தில் இந்திரவிழாக் கொண்டாடும் வழக்கமிருந்தது. மாதவியும், அவ்விழாவிற் கலந்து தன் ஆடல் பாடல்களால் மக்களை மகிழ்வித்தாள்.

கோவலனை எந்த ஆராய்ச்சியும் நிபந்தனையும் இன்றிக் கண்ணகி ஏற்றுக் கொண்டாள். ஏற்றுக் கொண்டது மட்டுமல்லாது வாழ்க்கைத் தத்துவத்தையும் அவள் கூறுவதாகக் கவிஞர் பா.விஜய் அமைத்துள்ளார்.

*''வாழ்க்கை ஒரு வானம்*
*இதில்*
*இளமை ஒரு வானவில்*
*வானவில் மோகம்*
*வடிக*
*சூரியனைக் கைப்பற்ற*
*குளுரைத்து எழுக !''* (காற்சிலம்பு ஓசையிலே, பாகம் - 2, ப. 177)

என்று கோவலனின் தவறுகளை மன்னித்து, கடந்த கால நினைவுகளை ஒதுக்கிவைத்து, எதிர்வரும் வெற்றியினைக் கைப்பற்றும் வழிமுறைகளையும் எடுத்துக் கூறுகின்றாள் கண்ணகி.

### மதுரைக் காண்டம்

பெருந்தவறு இழைத்த கோவலன் பரத்தையர் வீதியில் வலம் வரும்போது சிறிதும் சலனமின்றிப் பயணம் செய்கின்றான். அதற்குச் சிற்சில அனுபவங்களைப் பகர்கின்றார் கவிஞர் பா. விஜய்,

*"மனம் பஞ்சாக இருந்தால்*
*ஆசை வேர்*
*பற்ற வாய்ப்புண்டு !*
*மனம் பாறையாக இருந்தால்*
*ஆசை வேர்*
*நுழைய வாய்ப்புண்டு*
*மனம் காற்றாக இருந்தால்*
*ஆசை உலை*
*யாதும் செய்யாது!*
*அவன் காற்றாயிருக்கிறான்*

(காற்சிலம்பு ஓசையிலே, பாகம் - 2, ப. 59)

### முடிவுரை

பெண்ணின் பெருமை பேசுகின்ற தலைமைக் காப்பியத்தின் கதைக்கருவினைக் களமாகக் கொண்டு எழுந்துள்ள புதுக்கவிதை வடிவம் புரிந்துகொள்வதற்கு மிக எளிமையானதாகவும், புதிய சிந்தனைத் தோற்றத்திற்குக் காரணமாகவும் அமைந்துள்ளது.

கற்பின் கனலியாக இளங்கோவடிகள் படைத்தளித்துள்ள கண்ணகியின் பெருமையை உயர்வாகப் பேசும் புதுக்கவிஞர்கள், காவியத்தின் வளர்ச்சியைப் போலவே நூலின் வளர்ச்சியைப் படிப்படியாக உயர்த்திக் கொண்டு செல்கின்றார்.

காலங்கள் மாறினாலும் தமிழ் மண்ணின் மாண்புகளும், விழுமியங்களும், செம்மாந்த மொழித்திறனும் சுவைகுன்றாது வாழும் என்பதையே இந்த இலக்கியங்கள் உணர்த்தி நிற்கின்றன.

தமிழின் உயர்வுக்கும் தமிழ்மண்ணின் பெருமைக்கும் நிலைக்களனாகக் கவிஞர் பா.விஜய் படைத்துள்ள காற்சிலம்பு ஓசையிலே என்னும் புத்திலக்கிய நூல், காப்பியத் தேனைப் புதிய காலத்தில் வார்த்தெடுத்துத் தருகின்றது என்றால் அது மிகையன்று.

# திருக்குறளில் தும்மல்

*ஆறுவிரல் ஐம்பொறி*
வீரசோழபுரம்

குழந்தைகள் தும்மும்போது பெற்றோரும் அண்மையில் உள்ளோரும் நூறு வயது வாழ்க என்று மூன்று சொற்களால் குழந்தையை வாழ்த்துவது அக்கால வழக்கம். தும்மும்போது அதிவிரைவாக வெளியேறும் நீர்த்துமியுடன் கண்ணறியாத நோய்க் கிருமிகளும் வெளியேறுகின்றன. இஃது ஒரு மருத்துவச் செய்தி. உடலிலிருந்து நோய்க் கிருமிகள் வெளியேறுவதால் நோய்கள் குறைகின்றன. ஆயுட்காலம் நிறைகிறது. இதனால் தும்மும்போது நூறாண்டு வாழ்க என்று வாழ்த்துவது பொருத்தமாக அமைகிறது. தும்மல் உயர்ந்துவிடுகிறது.

தும்மலைப் பற்றி ஐந்து நுண்ணிய கருத்துக்களைத் தெய்வப்புலவர் தெரிவித்துள்ளார்.

அவை :

1. தும்மும்போது அண்மையிலுள்ளோர் நூறாண்டு வாழ்க என வாழ்த்துதல்
2. சேய்மையில் உள்ள யாரோ நம்மை நினைக்கும் போது நமக்குத் தும்மல் வருதல்.
3. தும்மலை அடக்க முடிதல்.
4. சில நேரங்களில் தும்மல் வருவது போன்று உணர்வு தோன்றும். ஆனால் வராதிருத்தல்.
5. தும்மல் முன்னெச்சரிக்கையின்றி திடீரென்று தோன்றுதல் என்பனவாம்.

இவ்வைந்து கருத்துக்களில் முதல் கருத்தடங்கிய ஒரு குறட்பாவை இங்கே காண்போம்.

*ஊடி இருந்தோமாத் தும்மினார் யாந்தம்மை*
*நீடுவாழ் கென்பாக் கறிந்து.* - குறள் - 1312

நான் ஊடல் கொண்ட போது என் காதலர் தும்மினார். என்ன நினைத்துத் தும்மினார்? வாழ்க என்று நான் வாழ்த்துவேன் என்று

நினைத்துத் தும்மினார். இஃது இக்குறளின் சுருக்கவுரை. இரண்டாவது கருத்தடங்கிய ஒரு குறட்பாவை இங்கே காண்போம்.

*வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்*

*யாருள்ளித் தும்மினீர் என்று* - குறள் - 1317

தலைவன் தும்மினான். தலைவி வாழ்த்தினாள். வாழ்த்திய தலைவி, யாரோ ஒருத்தி உம்மை நினைக்கிறாள் அதனால்தான் தும்மினீர் அப்படி உம்மை நினைப்பது யார்? என்று தலைவனிடம் கேட்டு அழுதாள். இஃது இக்குறளின் சுருக்கவுரை. இக்குறளில் அழித்தழுதாள் என்ற சீரில் செறிவு மிக்குள்ளது. இச்சீர், முன் அழுதவள் மீண்டும் அழுதாள் என்ற பொருளைத் தருகிறது.

மூன்றாவது கருத்தடங்கிய ஒரு குறட்பாவை இங்கே காண்போம்.

*தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்*

*எம்மை மறைத்திரோ என்று* - குறள் - 1318

யாருள்ளித் தும்மினீர்? என்ற கேட்டு தலைவி முன் குறட்பாவில் அழுதாள். இக்கேள்வியும், அழுகையும் தலைவியிடமிருந்து மீண்டும் எழாமல் இருக்க வேண்டும் என்று தலைவன் விரும்பினான். இன்னொரு தும்மல் வரவே அதை அடக்கினான். தலைவன் தும்மல் அடக்குவதை தலைவி அறிந்தாள். நும்மை யாரோ ஒருத்தி நினைப்பதை எம்மிடமிருந்து மறைக்கவே தும்மலை அடக்கினீர் என்று சொல்லி தலைவி அழுதாள். இஃது இக்குறளின் சுருக்கவுரை. இக்குறட்பாவில் செறுப்ப,நுமர்உள்ளல் என்ற சொற்கள் நயமிக்கவை.

நான்காவது கருத்தடங்கிய ஒரு குறட்பாவை இங்கே காண்போம்.

*நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்*

*சினைப்பது போன்று கெடும்.* - குறள் - 1203

என் காதலர் என்னை நினைப்பவர் போன்று இருந்து பின் நினைக்கவில்லை போலும். அதனால்தான் எனக்கு தும்மல் வருவது போன்று இருந்து பின் வரவில்லை என்று தலைவி வருந்திக் கூறுகிறாள். இஃது இக்குறளின் சுருக்கவுரை. இக்குறட்பாவில் சினைப்பது என்ற சொல்லாட்சி சிறப்பு மிக்கது. சினைத்தல் என்ற சொல்லுக்குத் தோன்றுதல், அரும்புதல், முளைத்தல் எய்தல் எனப் பல பொருள்களைத் தமிழ் அகராதி கூறுகிறது.

ஐந்தாவது கருத்தடங்கிய ஒரு குறட்பாவை இங்கே காண்போம்.

*மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்*

*தும்மல்போல் தோன்றி விடும்.* - குறள் - 1253

என் காமத்தை யான் மறைக்கிறேன். ஆனால் அக்காமம் தும்மல்போல் முன்னெச்சரிக்கையின்றித் திடீரென்று வெளிப்பட்டுவிடுகிறது என்று தலைவி வருந்திக் கூறுகிறாள். இஃது இக்குறளின் சுருக்கவுரை, இக்குறளில் குறிப்பின்றி என்ற சொல்லே முன்னெச்சரிக்கையின்றி, திடீரென்று என்ற பொருள்களைத் தருகிறது. இக்குறளில் தும்மல் உவமையாக்கப்பட்டுள்ளதை மிக எளிதாக அறியலாம்.

*வகைபெற வந்த உவமைத் தோற்றம் - 272*

*உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை - 274*

இது தொல்காப்பிய (பொருளதிகாரம்) இலக்கணம். உயர்ந்ததையே உவமையாக்க வேண்டும் என்ற இவ்விலக்கணப்படி தும்மல் உவமையானதால் உயர்ந்துவிடுகிறது.

திருவள்ளுவர் தும்மலை உற்று நோக்கிச் சிந்தித்து ஆராய்ந்து ஐந்து நுண்ணிய கருத்துக்களை இன்பத்துப் பாலாக்கி அழகாக நமக்குப் படைத்துள்ளார். வேறு எந்த இலக்கியத்திலும் தும்மலைப் பற்றிய செய்தி இருப்பதாகத் தெரியவில்லை. இதனால் திருவள்ளுவர் இன்றளவும் நின்று நிலைத்திருக்கிறார். போற்றிப் பாராட்டப்படுகிறார். இவரது பெருமைகளை என்னொரு எழுதுகோலால் எழுதவும் ஒண்ணுமோ?

# வாசகர் வாசகம் (1)

மதிப்பிற் சிறந்த பெருந்தகையீர்,

வணக்கம். செந்தமிழ் பிப்ரவரி இதழ், செந்தமிழ்க் கல்லூரியின் பட்டமளிப்பு விழாப்படம், பல்கலை முதன்மை கிடைத்த செய்தி, ஏந்தி வந்து மகிழ்வித்தது ! நல்வாழ்த்துக்கள். தொடர்க தமிழ்த் தொண்டு ! இதழில் கவிதைக்குத் தொடர்ந்து இடம் தருவது பாராட்டுக்குரியது ! செந்தமிழில் பரிதிமாற் கலைஞர் எனும் பெயர் மாற்றமும் தெரிவிக்கப்பட்ட செய்தியை, இதழ் மணம் வழி அறிமுகம் பெற்ற பெயர்த்தியார் தம் கட்டுரைவழிதான், முதன் முதலாக அறிந்தோம்.

பத்து கட்டுரைகளில், எளியேனின் கட்டுரையும் வெளியிட்டுள்ளீர்கள். மிக்க நன்றி !

அன்புடன்,
**புலவர் சி. பாண்டுரங்கன்**
ஆம்பூர்

# வாசகர் வாசகம்

2

மதிப்புயர் செந்தமிழ் ஆசிரியப் பெருந்தகை அவர்கட்கு, வணக்கம்.

செந்தமிழ் தொகுதி 55, பகுதி 4, பிப்ரவரி இதழில் சபரிமலை மலைப்பேரொளிச் சுடர் பற்றி எழுதிய திரு ஆதி. பாலசுந்தரம் அவர்களின் கருத்துக்கு வலுசேர்ப்பதாகத் தற்போது தகவல் ஊடகங்கள் மகரசோதி இயற்கையன்று, செயற்கையாய் ஏற்றப்படுவதே என்ற உண்மையை வெளிப்படையாக அறிவித்து விட்டதால் செந்தமிழில் வெளியான கட்டுரை வெற்றிக் கட்டுரை எனலாம்.

குறுந்தொகை உணர்த்தும் ஓர் ஐயப்பாடு பற்றிய முனைவர் இந்திராகாந்தி அவர்களின் கட்டுரையும் சிறப்பான சிந்தனையைத் தந்து செந்தமிழ் இதழைப் பரிணமிக்கச் செய்துள்ளது. ஏமாற்றப்படுவது எந்தக் காலத்திலும் உண்டு. அதனால் எந்தக் காலச் சமூகமும் ஆரோக்கியமானதன்று என்பதே உண்மை. அதற்காகச் சமூகத்தை வெறுத்து விட முடியாது. வீடு என்றால் கழிவுப் பொருள் ஓடச் சாக்கடையும் இருக்கும். அதற்கு மூடி போடலாம். திறந்திருந்தால் நாறும் என்பதால் தான் அந்தக் காலத்தில் இன்னா தம்ம இவ்வுலகம் இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே எனப் புறநானூறு நூல் அமைதியைத் தீர்வாகத் தந்தது.

அன்புடன்,

**தமிழாகரர் தெ. முருகசாமி,** புதுச்சேரி

3

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்கட்கு, வணக்கம்.

**பொருள் : அகநானூற்றில் ஆறுகளும்; ஊர்களும்.**

"கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
முதுநீர் முன்றுரை முசிறி முற்றி" (அகம் 57 : 14–15)

என்ற மதுரைக் கணக்காயர் மகனார் நக்கீரனாரின் அகநானூற்றுப் பாடல் வரிகளுக்கு

"பாண்டியர்கள் மதுரையைத் தலைநகராகக் கொண்டும், முசிறியைத் துறைமுகமாகக் கொண்டும் தமிழகத்தின் தென்பகுதியைத் தொன்று தொட்டு ஆண்டு வந்தனர்" என்று விளக்கம் கூறுகின்றார் முனைவர் அ. ஜம்புலிங்கம் அவர்கள் / அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தனது அகநானூற்றில் ஆறுகளும், ஊர்களும் என்ற கட்டுரையில்! (செந்தமிழ், மே இதழ்)

ஆயினும் நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களும் கவியரசு இரா. வேங்கடாசலம் பிள்ளை அவர்களும் அவர்களது அகநானூற்று உரையில் (கழக வெளியீடு) "கொய்த பிடரிமயிரினையுடைய குதிரைகளையுடைய, கொடி கட்டிய தேரினையுடைய பாண்டியன், பழமையான கடலின் துறைமுகத்தையுடைய முசிறியை வளைத்து", வெற்றி கொண்டான், என்கின்றனர். இவ்வகப் பாடலை நக்கீரனார் பாடிய பொழுது முசிறித்துறைமுகப் பட்டிணம், பாண்டியனின் ஆளுமையில் இருந்திருக்கிறதெனக் கோடலே சாலச்சிறந்தது. என்னும் இக்கருத்து ஆய்வுக்குரியதே ! மீண்டும் வணக்கத்துடன்,

தங்களன்புள்ள,

**வி. நாகசுந்தரம்**

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா



தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : **தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1**

RNI Regd. No. 5508/57 August 2011 MA/130/2011-2013
Posted at Madurai BPC on 25th of every month

# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்



(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

**2011 - 2012ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது**

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, [illegible] திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் மு. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குரு[illegible]**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

21-A

From
**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

திருமிகு.இரா.அழகுமலை
எம்.ஏ.,எம்.ஃபில்., அவர்கள்,
21-A முத்துராமலிங்கத் தேவர் தெரு,
கோச்சடை,
மதுரை 625 010.

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.